பக்கங்கள் : பதின்னான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 26 வியாழக்கிழமை (11.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 289

# சர்வதேச தொண்டர் அமைப்புகள் வன்னியிலிருந்து வெளியேறுகின்றன

## அகதிகளின் நிலைமை மோசமடையும் அபாயம்!

வவுனியா, செப்ரெம்பர் 11

வன்னியிலிருந்து மனிதாபிமானத் தொண்டு அமைப்புக்கள் உடனடியாக வெளியேறிவிட வேண்டும் என்று இலங்கை அரசு உத்தரவிட்டிருப்பதையடுத்து, சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மிகப் பலவும் நேற்று முதல் அங்கிருந்துவெளியேறத் தொடங்கியிருக்கின்றன.

ஐக்கிய நாடுகளின் சில தொண்டு அமைப்புகளும், ஒக்ஸ்பாம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், சோ.ஆ (ZOA), வேள்ட் விஷன், டெனிஸ் புனர்வாழ்வு நிதியம் ஆகிய அமைப்புகளும் நேற்று வன்னியிலிருந்து தமது பணிகளை நிறுத்திக்கொண்டு வவுனியாவுக்கு வந்தன. (14ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை இன்று இல்லை; நாளையே

யாழ்ப்பாணம், செப்.11

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்குமிடையிலான கப்பல் சேவை இன்று வியாழக்கிழமை இடம்பெறாது எனவும் நாளை வெள்ளிக்கிழமை வழமை போல் இடம்பெறும் எனவும் அரசாங்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மனிதாபிமான அமைப்புகளை அனுமதிக்கக் கோருகிறார் ஐ.நா.செயலர்

கொழும்பு, செப். 11

இலங்கையில் மோதல் காரணமாக பாதிக்கப்பட்டு மனிதாபிமான உதவிகள் அவசரமாகத் தேவைப்படும் நிலையில் உள்ள மக்களிடம் மனிதாபிமான அமைப்புகள் சென்றடைவதை உறுதி செய்யுமாறு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கி மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னியில் செயற்படும் மனிதநேய அமைப்புகளை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அரசு உத்தரவிட்டுள்ள சூழ்நிலையில் ஐக்கிய நாடுகள் செயலாளரின் இவ்வேண்டுகோள் வெளியாகியுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் வன்முறைகள் தீவிரமடைவது குறித்தும் மோதல்கள் காரணமாக பொதுமக்கள் மீதான தாக்கம் அதிகரிப்பது பற்றியும் பான் கி மூன் கவலை வெளியிட்டுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கல்கிசையில் குண்டுவெடிப்பு சேதங்கள் இல்லை

கொழும்பு, செப். 11

கொழும்பு கல்கிசை டி சேரம் வீதியில் உள்ள ரயில் பாதையில் நேற்றிரவு 7.45 மணியளவில் சிறிய குண்டு ஒன்று வெடித்தது.

இருப்பினும் இந்த வெடிப்புச் சம்பவத்தினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவிலிருந்து வவுனியாவுக்கு 'ராடர்'

வவுனியா, செப். 11

வவுனியா படைத்தலைமையத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் அங்கிருந்த 'ராடர்' கட்டுமாணம் முற்றாகச் சிதைவடைந்ததைத் தொடர்ந்து கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்த மற்றொரு ராடர் கருவி வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு நிறு வப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

### சிறப்பிதழ் உள்ளே

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத் தேர்த் திருவிழா சிறப்பிதழ் 6ஆம், 7 ஆம் பக்கங்களில்.

## உணவு, குடிதண்ணீர் மற்றும் வசதிகள் குறைவு

## வன்னியில் தொண்டு அமைப்புகள் பாதிப்புற்ற மக்களுக்கு உதவ அனுமதிக்க வேண்டும்

### அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வலியுறுத்து

கொழும்பு, செப். 11

மோதல் காரணமாகப் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளைச் செய்வதற்கு தொண்டு அமைப்புகள் அங்கு செல்வதற்கு அனுமதிக்குமாறு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

செவ்வாய்க்கிழமை ஜெனீவாவில் யு.என்.எச்.சி.ஆர்.அமைப்பின் பேச்சாளர் ரொன் ரெட்மொண்ட் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

உணவு, தங்குமிடவசதி,குடிதண்ணீர் மற்றும் சுகாதார உபகரணங்கள் இப்போது மிகமிகக் குறைவாக - மிகவும் ஆபத்தான நிலையில் - உள்ளதாகவும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

மோதல்கள் காரணமாக தத்தமது பகுதிகளிலிருந்து தப்பியோடிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் குறித்தும் யு.என்.எச்.சி.ஆர்.கவலை வெளியிட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரச விமானங்கள் கிளிநொச்சி நகரப் பகுதியில் குண்டுமாரி

## 23 வீடுகள் நாசம்; 'தளிர்' இல்ல குழந்தைகள் அருந்தப்பு

கிளிநொச்சி, செப். 11

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி நகரப்பகுதி மீது நேற்றுக் காலை அரச விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ச்சியாகக் குண்டு மாரி பொழிந்தன.

காலை 7 மணியளவில் கிளிநொச்சி வான் பரப்புக்குள் பேரிரைச்சலுடன் நுழைந்த விமானங்கள் நகரப்பகுதியில் தொடர்ச்சியாக 16 குண்டுகளைக் கொட்டித் தீர்த்தன. குண்டுச் சத்தங்களால் நகரப் பகுதி மட்டுமல்லாது அதனை அண்டிய பகுதிகளும் அதிர்ந்தன.

இதன் போது பொது மக்களின் 23 வீடுகள் சேதமடைந்தன. அவற்றில் 3 வீடுகள் முற்றாகத் தரைமட்டமாகிவிட்டன. மேலும் 9 வீடுகள் கடுமையாகச் சேதமடைந்தன.

90 வயதுடைய முருகன் தம்பு என்ற முதியவரும் கனகபுரம் வித்தியாலய மாணவனான ஆனந்தகனேசன் கஜரூபன் (வயது - 11) என்பவரும் காயமடைந்தனர். இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

விமானத்தின் இரைச்சலைக் கேட்டவுடன் மக்கள் அலறியடித்துக்கொண்டு பதுங்கு குழிகளுக்குள் ஓடிச் சென்று பாதுகாப்புத் தேடிக் கொண்டனர். இதனால் உயிர்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

(14ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மண்ணில் புதியதோர் உதயம்

லக்ஸ்மி காகிதாதிகள்

Lugsmi Stationery Centre

இல.02, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (ஔவையார் சிலைக்கு முன்பாக)

இன்று (11.09.2008) வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு இல.02, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உதயமாகிறது

மக்கள் மனம் கவர்ந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியே வீட்டில் இருந்த இளம்பெண்ணை கூப்பிட்டு ஆயுததாரிகள் சுட்டுக் கொன்றனர்

கைதடி வடக்கில் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு வீட்டில் தனித்திருந்த இளம் பெண்ணை அங்கு வந்த ஆயுததாரிகளால் வெளியே வருமாறு கூப்பிட்டு சுட்டுக் கொன்றனர்.

கைதடி வடக்கைச் சேர்ந்த சிவராமலிங்கம் நந்தாயினி என்பவரே கொல்லப்பட்டவராவார்.

பெற்றோர் வெளியில் சென்ற வேளை, கொலையுண்ட பெண் தனித்திருந்தார். நேற்று நண்பகல் சுமார் ஒன்றரை மணிய ளவில் அங்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகள் இளம் பெண்ணை வெளியே வருமாறு கூப்பிட்டனர்.

அவர் வெளியே வந்தவுடன் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர்- என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்தில் விசாரணை நடத்திய சாவகச்சேரி நீதிவான், சடலத்தை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி பிரேத பரிசோத னையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக் கும்படி உத்தரவிட்டார்.

(அ-01-75-25)

# காலையில் தோட்டத்துக்குச் சென்றவர் நண்பகலின் பின்னர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 11

குடத்தனையில் உள்ள தமது தோட்டத்துக்கு சென்றவர் அங்கிருந்து முக்கால் மைல் தூரத்தில் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குடத்தனை, கண்டல்கட்டைச் சேர்ந்த குடும்பஸ்தரான கிட்டிணன் கதீஸ்வரன் (வயது 24) என்பவரே சடலமாக மீட்கப் பட்டவர் ஆவார்.

நேற்றுக் காலை 6.30மணிக்கு வழமை போல் தமது தோட்டத்துக்கு செல்வதாக தெரிவித்துவிட்டு வீட்டிலிருந்து இவர் புறப்பட்டார். நண்பகல் வரை வீடுதிரும் பாததை அடுத்து, உறவினர்கள் அவரை தேடிச்சென்றனர்.

தோட்டத்தில் இருந்து முக்கால் மைல் தொலைவில் சூட்டுக் காயங்களுடன் சடலம் கிடக்க கண்டு பிடிக்கப்பட்டது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை மேலதிக நீதிவான் அலெக்ஸ்ராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-01-78)


## பாராட்டுதலும் வாழ்த்துதலும்

### திருமதி றூபா உதயரட்ணம்

(B.Com/ PGD in Edu (Merit) / MA in Planning)

(ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் வலயம், சண்டிலிப்பாய்)



யாழ். பல்கலைக்கழக முதுமாணி பிராந்திய திட்டமிடல் பரீட்சையில் சித்தி பெற்றமைக்காக இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வியில் மேன்மேலும் உயர்வு பெற்று பதினாறும் பெற்று கல்விப் பணியில் சிறந்த சேவையாற்றப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அலுவலர்களும் பாடசாலை அதிபர்களும்.



## நன்றி நவிலல்

எமது அன்பின் உறைவிடமாகத் திகழ்ந்து எம்மை விட்டுத் திடீரெனப் பிரிந்த

### வோல்டர் பாலகிருஸ்ணன் இராஜதுரை

அவர்களின் மறைவுக்கு தொலை பேசியூடாக அனுதாபம் தெரிவித்து ஆறுதல் மொழி கூறிய மாட்சிமை தங் கிய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அவர்கள் உட்பட உயர் நீதிமன்ற நீதிபதிகள், அரச அதிகாரிகள் ஆகியோருக்கும்...

மற்றும் நேரில் சமுகமளித்து இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட சிவில் மேன் முறையீட்டு மேல் நீதிமன்ற நீதி பதிகள், மாவட்ட நீதிபதிகள், அரச சட்டத்தரணி உட்பட சட்டத்தரணிகள், நீதிமன்ற ஊழியர்கள், யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர், அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையை அவரது இல்லத்தில் நிகழ்த்தி உதவிய தேவ ஊழியர்கள் ஆகியோருக்கும்...

பூதவுடலைக் கிளிநொச்சியில் இருந்து அன்னாரது சொந்த இடமான கொக்குவில் மேற்கில் உள்ள இல்லத் துக்கு கொண்டுவர ஒத்துழைப்பு நல்கிய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்துக்கும் எமது நன்றிகள்...

மற்றும் பல வழிகளிலும் உதவிய கரித்தாஸ்-கியூடெக் நிறுவன இயக்குநர், பணியாளர்களுக்கும், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் மலர்வளை யங்கள் வைத்தும் கண்ணீர் பிரசுரங்கள் வெளியிட்டும் அஞ்சலி உரை ஆற்றியோருக்கும் எம் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர் சார்பாக
இ.க.விக்னராஜா
(மேல்நீதிமன்ற நீதிபதி-யாழ்ப்பாணம்).



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 12 |
| 11 | 08 |
| 1940 | 2008 |

### அமரர் சின்னத்தம்பி சிதம்பரநாதன்

கரவெட்டி கிழக்கு, கவுந்திலை பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தி, வீரபத்திர கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிரியைகள் இன்று (11.09.2008) வியாழக் கிழமை காலை 6 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திர கோயிலடி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

(சி/554557) குடும்பத்தினர்.


## குடும்பஸ்தரைக் காணவில்லையென ஆணைக்குழுவில் முறைப்பாடு

நல்லூரில் குடும்பஸ்தர் ஒருவர் காணாமற் போனமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலியார் வீதி, கச்சேரி நல்லூரைச் சேர்ந்த தர்மராஜா ரங்கன் (வயது 28) என்ற குடும்பஸ்தரை கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து காணவில்லை என அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

அன்று பி.ப 2மணியளவில் கடைக்குச் சென்ற அவர் பின்னர் வீடு திரும்ப வில்லையென அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-50-25)


## தவறிவிட்டது

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியுடைய வரதராஜா தக்ஷாஜினி என்பவருடைய (887911754v) எனும் இலக்கமுடைய தே.அ.அட்டை திருநெல்வேலிக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **காளி கோயிலடி, கோண்டாவில் மேற்கு** எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.



## விற்பனைக்கு

மணித்தாரா, வான்கோழி, சணல் மறி ஆட்டுக்குட்டி, 45 நாள் நிரம்பிய அல்சேசன் பெண் நாய்க்குட்டி, கறுப்பு, வெள்ளை பொமேரியன் நாய்கள்.

**தொடர்பு: லிங்கமூர்த்தி மயூரன் (C.T.B.)**
**இல.209, பலாலி றோட்,**
**கோண்டாவில் கிழக்கு.**



## விற்பனைக்கு

மரம் + கண்ணாடியினாலான கடைகளில் பொருள்கள் காட்சிப்படுத்தும் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 4/3, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.**
Tel - 021 222 6183, 0774245943


### செயல் நூல் வெளியீடு

தரம் 11 வகுப்பு புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய ஆசிரியர்செ.செல்வரஞ்சன் உருவாக்கிய செயல்நூல் நாளை வித்தியாலய மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு செயல்நூலை வெளியிட்டு வைப்பார்.


## மரண அறிவித்தல்கள்

### செல்வி சிவராமலிங்கம் நந்தாஜினி (நந்தா)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவராமலிங்கம் நந்தாஜினி (நந்தா) நேற்று (10.09.2008) புதன்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் சிவராமலிங்கம் - தேவரஜனி தம்பதியினரின் அன்பு மகளும், லோகயிரதன், பமிலா, தாட்சாயினி, ஜர்மிலா, கம்சா ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2008) வியாழக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி தச்சன்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.சிவராமலிங்கம் (தந்தை).

கைதடி வடக்கு,
கைதடி.

### சோதிமுத்து பாலசிங்கம் (பாலா மாஸ்ரர்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிமுத்து பாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், நடராஜ இராமலிங்க வித்தியாலயம், விஷ்ணு வித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல்) நேற்று (10.09.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சோதிமுத்து - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், பகவதியின் அன்புக் கணவரும், ஜெயதேவி, ஜெயக்குமார் (அமரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிகாந்தனின் (பாதுகாப்பு உத்தியோகத்தர், ஆசிரியர் பயிற்சி கலாசாலை, பலாலி) அன்பு மாமனும், பாக்கியரத்தினம், மகிழ்மலர், சுகந்தமலர், புஸ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம் (அமரர்), பத்மாவதி (அமரர்), புனிதவதி (அமரர்), இராஜகோபால் (அமரர்), லோகநாதன் (கனடா), புஸ்பவதி ஆகியோரின் மைத்துனரும், நிதுஷன், தினுஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிறிகாந்தன் (மருமகன்),
(ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி).

சங்கணாவத்தை வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

### நாகலிங்கம் இராமநாதன்



(ஓய்வு பெற்ற லிகிதர், காணிப்பதிவு அலுவலகம்)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராமநாதன் 09.09.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி-சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற ஆனந்தலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிதம்பரநடராஜா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், கோணேஸ்வரதேவி (கனடா), விக்கினேஸ்வரதேவி (சங்கானை), காலஞ்சென்றவர்களான சுசிலாதேவி, ஈஸ்வரன் மற்றும் நிர்மலாதேவி (சங்கானை), ரமேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி (கனடா), அமரர் சிவபரன் மற்றும் இராஜசிங்கம் (நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல், யாழ்ப்பாணம்), சுகந்தி (லண்டன்), பத்மாவதி, கமலாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், விக்கிரமன், வக்சலா, சியாமளா, ஹெல்ஷன், விபுலானந்தன், மேனகா (கனடா), தாட்ஷாயனி-நிரஞ்சன் (திருகோணமலை), துஷ்யந்தினி (கனடா), ஜினோத், சவீஷன், பிரவீனா, லவினா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், ஹர்ஷானி, ஆன்ஷியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2008) வியாழக்கிழமை மு.ப. 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விக்னேஸ்வரதேவி (மகள்)
T.P. 0779007094

ஒடக்கரை வீதி,
சங்கானை.



## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை கந்தையா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா நேற்று (10.09.2008) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், தேவமலர், தேவமனோகரன், தேவகாந்தன், தேவமகேஸ்வரன், தேவசாந்தினி, தேவதயாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகேந்திரன், விமலாதேவி, நவரஞ்சனா, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரூரன், ஆர்த்தி, ஆரணி, ஆதித்தன், விதுஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுண்டுக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (11.09.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A.கனகேந்திரன் (மருமகன்)
(களஞ்சியப் பொறுப்பாளர், W.F.P.),
க.தேவமகேஸ்வரன் (மகன்).

"[illegible]",
19, [illegible]தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி. (78342)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், தென்மராட்சி வலயப் பிரதிக் கல்வித் திட்டமிடல் பணிப்பாளர் நா.சத்தியநாதன், பாடசாலை அதிபர் வ.நடராசா, சிவத்தமிழ்ச் செல்வர் சிவ மகாலிங்கம், சிதம்பரநாதக் குருக்கள் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் பாடசாலை 'பாண்ட்' வாத்திய அணியினர் விருந்தினர்களை அழைத்து வருவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம். நூற்றாண்டு விழாச் சிறப்பு மலரை சிவமகாலிங்கம் வெளியிட்டு வைக்க முதற்பிரதியைத் திருக்கணித அச்சக உரிமையாளர் சிவஞானம் பெற்றுக் கொள்வதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்:சரா)

# மனைவி செல்லம்மாளின் பார்வையில் மகாகவி பாரதி

1921 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று தமது 39 ஆவது வயதில் அமரத்துவம் அடைந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 86 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

பாரதியாரின் மனைவி செல்லம்மாள் பாரதி 1951 ஆம் ஆண்டு தி[ருச்சி] வானொலியில் 'என் கணவர்' என்ற தலைப்பில் பாரதியார் குறித்து ஆற்றிய உரை பாரதியாரின் நினைவாக இங்கு பிரசுரமாகிறது.

ஊருக்குப் பெருமை என் வாழ்வு. வையகத்தார் கொண்டாட வாழவேண்டும் என்ற என் கனவு ஓரளவு பலித்ததென்னவோ உண்மைதான். இன்று என் கணவரின் புகழ் விண்முட்டிச் செல்கிறது. இன்று மகாகவியின் மனைவியாகப் போற்றப்படும் நான் அன்று பைத்தியக்காரன் மனைவியென்று பலராலும் ஏசப்பட்டேன். விநோதங்கள் என் வாழ்க்கையில் அதிகம். உலகத்தோடொட்டி வாழ வகை அறியாத கணவருடன் அமர வாழ்வு வாழ்ந்தேன் என்றால் உங்களுக்குச் சிரிப்பாகத்தான் இருக்கும். யாருக்கு மனைவியாக வாய்த்தாலும் வாய்க்கலாம். கவிஞன் மனைவியாயிருப்பது கஷ்டம்.

கவிஞர்கள் போக்கே ஒரு தனி. உண்பதிலும் உறங்குவதிலும்கூட சாதாரண ம[னித]ரைப்போல், அவர்கள் இருப்பதி[ல்]லை. கற்பனைச் சிறகு விரித்துக் கவிதைவானில் விட்டமிடும் பறவை, பூலோகத்திலே இருண்ட வீட்டிலே மனைவிக்கும் மற்றவருக்கும் சம்பாத்தியம் செய்துபோட்டு, சாதாரண வாழ்க்கை வாழ முடியுமா?

வறுமை, கவிஞனின் தனி உடைமை. கவிஞனுக்கு இந்த மண்ணுலகில் இன்பம் அளிப்பது கவிதை; ஆனால் வயிற்றுக் குணவு தேடி வாழும் வகையை அவன் மனைவிதான் கண்டு பிடிக்க வேண்டி வருகிறது. காதல் ராணியாக மனைவியைப் போற்றும் கவிஞன் அவளுக்குச் சாதமும் போடவேண்டும் என்ற நினைவேயின்றிக் காலம் கழித்தானேயானால், என்ன செய்ய முடியும்.

கவிஞன் விசித்திரமான தன்மை நிறைந்தவன்; அவனுக்கு எதுவும் பெரிதில்லை. ஆனால் கவலை நிறைந்த வாழ்நாளைக் கழிக்கவேண்டும் என்று எந்தப் பெண்தான் நினைக்க முடியும்? சிறு வயதில் ஆசாபாசங்களும் அபிலாஷைகளும் ஒவ்வொரு பெண்ணின் மனத்திலும் நிறைந்திருப்பது இயற்கைதானே? சுகமாக வாழ்வதற்கு சொர்க்கலோகம் சென்றால்தான் முடியும் என்ற நிலை கவிஞன் மனைவிக்கு ஏற்பட்டு விடுகிறது. அந்த நாளிலிருந்த சத்திமுத்தப் புலவரின் மனைவியிலிருந்து இன்று என்வரை சுக வாழ்வு ஒரே விதமாகத்தான் அமைந்திருக்கிறது. ஏகாந்தத்தில் அமர்ந்துவிட்டால் முனிவரும்கூட அவரிடம் பிச்சைதான் வாங்கவேண்டும். ஆனால் மனைத் தலைவியாகிய நான் அவ்வாறு நிஷ்டையிலிருக்க முடியுமா?

கவிஞர்களில் பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். கடவுளைப் பக்தி செய்யும் கவிஞன், காவியம் எழுதும் கவிஞன், இவர்களைப் புற உலகத் தொல்லைகள் சூழ இடமில்லை. எனது கணவரோ கற்பனைக் கவியாக மட்டுமல்லாமல் தேசிய கவியாகவும் விளங்கியவர். அதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். கவிதை வெள்ளத்தை அணை போட்டுத் தடுத்தது அடக்குமுறை. குடும்பமே தொல்லைக்குள்ளாகியது. ஆனால் நுங்கும் நுரையுமாகப் பொங்கிவரும் புது வெள்ளம் போல அடக்குமுறையை உடைத்துக் கொண்டு பாய்ந்து செல்லும் அவர் கவிதை.

காலையில் எழுந்ததும் கண்விழித்து, மேநிலைமேல், மேலைச் சுடர் வானை நோக்கி வீற்றிப்பார். ஸ்நானம் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு விதத்தில் அமையும். சூரிய ஸ்நானம்தான் அவருக்குப் பிடித்தமானது. வெளியிலே நின்று நிமிர்ந்து சூரியனைப் பார்ப்பதுதான் வெய்யிற் குளியல். சூரிய கிரகணம் கண்களிலே உள்ள மாசுகளை நீக்கும் என்பது அவர் அபிப்பிராயம். காலைக் காப்பி, தோசை பிரதான மாயிருக்க வேண்டும் அவருக்கு தயிர், நெய், புது ஊறுகாய் இவைகளை தோசையின் மேல் பெய்து தின்பார். அவருக்கு பிரியமான பொருளைச் சேர்த்துக் கொடுத்தால், அவரது நண்பர்களான காக்கை குருவியும் அதில் முக்காற் பாகத்தைப் புசித்து விடுவார்கள். எதை வேண்டுமானாலும் பொறுக்க முடியும்; ஆனால் கொடுத்த உணவைத் தாம் உண்ணாமல் பறவைகளுக்கு போட்டுவிட்டு நிற்கும் அவருடைய தார்மிக உணர்ச்சியை மட்டும் என்னால் சகிக்கவே முடிந்ததில்லை. சிஷ்யருக்குக் குறைவு இராது செய்திகளுக்கு குறைச்சல் இல்லை கானாமுதமோ காதின் வழியே புகுந்து உடல் எங்கும் நிறைந்து விடும். களிப்பை மட்டும் பூரணமாக அனுபவிக்க முடியாமல் உள்ளிருந்து ஒன்று வாட்டும் அதுதான் கவலை!

இச்சகம் பேசி வாழும் உலகத்தில் எப்பொழுதும் மெய்யே பேசி வாழ வேண்டும் என்பது அவரது கட்டளை. எக் காரணத்தைக் கொண்டும் பொய் பேசக்கூடாது. இது எத்தனை சிரமமான காரியம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான்.

புதுவை - எனக்கு சிறைச்சாலை ஆகியது. சிறைச்சாலை என்ன செய்யும்? ஞானிகளை அது ஒன்றும் செய்ய முடியாது தான். எதையும் ஏற்றுக்கொள்ளும் மனதிண்மை அவர்களுக்கு உண்டு. ஆனால் என்னைப் போன்ற சாதாரணப் பெண்ணுக்கு, இல்லறத்தை நல்லறமாக்க வேண்டும் என்ற ஒரே விஷயத்தை லட்சியமாகக் கொண்ட ஒருத் திக்குச் சிறைச்சாலை நவநவமான துன்பங்களை அள்ளித் தான் கொடுத்தது.



புதுவையில்தான் புதுமைகள் அதிகம் தோன்றின. புதுமுயற்சிகள், புதிய நாகரீகம், புதுமைப்பெண் எழுச்சி, புதுக் கவிதை இவை தோன்றின. இத்தனை புதுமை களும் எழுவதற்கு நான்தான் ஆராயச்சிப் பொருளாக அமைந்தேன் பெண்களுக்கு சம அந்தஸ்து வழங்க வேண்டுமா வேண்டாமா என்று வெகு காலம் ஆராய்ந்த பின்னரே பெண் விடுதலை அவசியம் என்ற முடிவு கண்டு, நடைமுறையில் நடத்துவதற்குத் துடி துடித்தார் என் கணவர். இந்த முடிவை அவர் காண்பதற்குள் நான் பட்ட பாடு சொல்லும் தரமன்று.

புதுவையில் அரசியலில் கலந்துகொள்ள ஒரு வசதியும் இல்லாத போதிலும், தமிழ் இலக்கியத் தொண்டு செய்வதனால் ஒருவாறு மன அமைதி பெற்றிருந்தார். நமது பொக்கிஷங்கள் என்று கருதத் தகும்படியான அவரது கவிதைகள் எல்லாம் இங்கு தான் தோன்றின. மனிதரை அமரராக்க வேண்டுமென்று தவித்த என் கணவர் எத்தனை இடையூறுகளும் எதிர்ப்புகளும் ஏற்பட்டபோதிலும் அவற்றை எல்லாம் மோதி மிதித்துவிட்டு தம் இலட்சியத்தில் முன்னேறும் துணிவு கொண்டு செயலாற்றினார்.

மகாகவி நாட்டிற்காக, அதன் சுதந்திரத்திற்காக வாழ்ந்தார். தமிழ்ப் பண்பாட்டில் சிறந்த அவர் ஈகை, அன்பு, சகிப்புத்தன்மை முதலான பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தது ஓர் அதிசயமன்று. தூங்கிக் கிடந்த தமிழரை விழிப்புறுத்தியதும் அதிசயமன்று; ஆனால் இன்று அவரது பூதவுடல் மறைந்த பின்பும் தமிழ் பேசும் ஒவ்வோர் உயிரிடத்தும் அவர் கலந்து நிற்பதுதான் அதிசயம் என்று எனக்குத் தோன்றுகிறது. 'விண்டுரைக்க மாட்டாத விந்தையடா!' என்று அவரது கவிதை மொழியில்தான் இந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. *

## உருவம் வேறு ஆனால் ஆற்றல் ஒன்றே

"எங்கு கண்டாலும் உருவமும், பெயரும் வேறுபடலாம். ஆனால் தெய்வீக சக்தி ஒன்றே. மனிதர்கள் உருவத்திலும், பெயரிலும் வேறுபடுகிறார்கள். ஆத்ம தத்துவம் ஒன்றே. ஒரு சாதகர் கேட்டார். "கோடான கோடி மக்கள் இருக்கின்றனர். ஆத்ம சக்தி எவ்வாறு ஒன்றாக இருக்க முடியும்" என்று சுவாமி கூறிய பதில்: மின் விளக்குகளால் அலங்காரம் செய்கிறோம்.

சிறியதும் பெரியதுமாகப் பல விளக்குகள் அமைக்கப்படுகின்றன. அவற்றின் உருவமும், ஒளி தரும் ஆற்றலும் வேறுபட்டவை. இருந்தாலும் அவற்றை இயக்குவது ஒரே மின் சக்தி தான், இல்லையா?

மதங்கள் வேறு, செல்லும் வழி ஒன்றே.
உடைகள் வேறு, துணி ஒன்றே.
நகைகள் வேறு, தங்கம் ஒன்றே.
பசுக்களின் நிறம் வேறு, பால் ஒன்று.
ஜீவராசிகள் வேறு, உள்ளிருப்பவன் ஒன்றே.
மலர்கள் வேறு, வழிபாடு ஒன்றே.



மனிதனும் தன் வாழ்க்கையை நடத்த, வேறு வேறாக இருக்கின்றான். இது தவிர இங்குள்ள நன்மக்களுக்குக் கூற என்ன உள்ளது.

ஒவ்வொரு உடலும் மின்குமிழ் போன்றது. உருவங்களும், பெயரும் வேறானவை, நிறங்கள் வேறானவை. (Voltage) வேறானது. ஆயினும் மின்சக்தி ஒன்றே. வோல்டேஜ் காரணமாக ஓர் இடத்தில் பல்ப் மங்கலாகவும், இன்னோரிடத்தில் பிரகாசமாகவும் எரிகிறது. தத்தம் தகுதிக்குத் தகுந்தாற்போல மனிதர் ஆத்ம சக்தி பெறுகிறார்கள். தெய்வத்துவம் அதற்குத் தகுந்தாற்போல அவர்களிடம் வெளிப்படுகின்றது. புனிதத்துவம் குறைந்திருந்தால், ஆத்ம சக்தி குறைவாக வெளிப்படும். இந்த உண்மையை உணர்ந்தவர்கள், வேறுபாடுகளைப் பொருட்படுத்த மாட்டார்கள்.

## முகாமைத்துவப் போட்டியில் வேலணைப் பிரதேச முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், செப்.11

கிராம அலுவலாகளுக்கு இடையிலான முகாமைத்துவ போட்டியில் வேலணை (தீவகம் தெற்கு) பிரதேச செயலர் பிரிவு மட்டத்திலான போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் முதல் மூன்று இடங்களை எவ்.ஏ. மரியதாஸ் (ஜே/14, வேலணை கிழக்கு), எஸ்.சிவா (ஜே/31, புங்குடுதீவு மத்தி கிழக்கு), எஸ். இரத்தினேஸ்வரன் (ஜே/10, அல்லைப்பிட்டி) ஆகியோர் பெற்றுள்ளனர். (202-95)

## நிவாரணம் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.11

உலக உணவுத் திட்டத்தின் கீழ் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நலிவுற்றோருக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரணத்தில் ஓகஸ்ட் மாதத்தின் ஒரு வாரத்திற்கான பொருள்கள் தற்போது விநியோகிக்கப்படுகின்றன.

உரியவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் கேட்டுள்ளார்.

மா, அரிசி, சமையல் எண்ணெய் ஆகிய பொருள்களே நிவாரணத்திற்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (202-224)

## இ.போ.ச.பணிக்கொடை

யாழ்ப்பாணம், செப்.11

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடமையாற்றி 2004 நவம்பர் மாதத்தில் இருந்து இளைப்பாறிய ஊழியரின் பணிக்கொடை நிலுவைகள் தொடர்பான மனு விசாரணை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை நாளை காலை 8.30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் கூடுமாறு ஓய்வுபெற்ற இ.போ.ச. (வட) ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (202)

## விசேட தேவையுடைய மாணவர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களின் விவரங்களை வலயப் பணிப்பாளர் திரட்டுகின்றார்.

குறிப்பிட்ட மாணவர்களின் விவரங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

இவ்வருடம் ஜனவரி தொடக்கம் ஜூலை வரை அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்களே கோரப்பட்டுள்ளன. (202-302)

## கால்நடை வளர்ப்போர் சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செப்.11

தென்மராட்சிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 2 ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் புதிய தலைவராக த.சிதம்பரப்பிள்ளையும், செயலாளராக செ.சுப்பிரமணியமும், பொருளாளராக க.சிவசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக நான்கு பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ணை ...விநாயகர் ஆலய அலங்கார உற்சவம்

(...08) வியாழக்கிழமை - இரத உற்சவம் (...முக விநாயகர்) பி.ப. 3 மணியில் இருந்து அபிஷேக வழிபாட்டுடன் மாலை 5 மணிக்கு ரதத்தில்.பவனி வருவார்.

நாளை (12.09.2008) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு 108 சங்காபிசேகம் நடைபெற்று மதியம் 12 மணிக்கு

**அன்னதானம் நடைபெறும்.**

விநாயகர் யானை வாகனத்தில் மாலை வீதி வலம் வருவார்.

தலைவர்,
ஆலய பரிபாலனசபை.

விளம்பர அனுசரணை:
**சிறி சிவாஞ்சனா நகையகம்**
இல.149 ஏ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து

**வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்**

| வெற்று பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|
| அரிசி பை | 8160 |
| மா பை | 5330 |
| சீனி பை | 4202 |
| சிறிய உரைப்பை | 1476 |
| சாக்கு | 101 |

மேற்படி வெற்று பொருள்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலை விண்ணப்பங்கள் 13.09.2008 ஆம் திகதிக்கு முன்னதாக

பொதுமுகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து
127, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு வெற்றுப் பொருள்களுக்கான கூறுவிலை விண்ணப்பம் என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கப் படல் வேண்டும்.

பொது முகாமையாளர்.
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து

11.09.2008

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் ஆங்கில நெறி சக ஆசிரிய மாணவி

திருமதி ஜெயந்தி ஞானகுமார் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி பரமசிங்கம் ஜெயபத்மினி தேவி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரி வித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆங்கில மன்றம்,
**பலாலி ஆசிரிய கலாசாலை**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 15 ★ 11 ★ 1920



இறப்பு 12 ★ 08 ★ 2008

**வேலுப்பிள்ளை தம்பையா**

திதி: ஏகாதசி - 11-09-2008

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி மற்றும் உதவிகள் பல செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின் றோம். இன்று (11.09.2008) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாதரவத்தை,
புத்தூர்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 ★ 07 ★ 1920



மறைவு 22 ★ 09 ★ 2007

**அமரர் சபாபதிப்பிள்ளை நடேசர்**

திதி: ஏகாதசி

அன்பான பப்பாவே
ஆண்டு ஒன்று போனாலும்
இங்கு நீங்கள் இல்லை என்பதுதான் நிஜம்
ஈர விழியுடன் உம் குடும்பம்

740, நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம். தொ.பே.0212223393

குடும்பத்தினர்.

## இராஜகோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை வீதியின் 2 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஷிர்டிசாயி சங்கரா ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரத்தின் கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.(202)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.11

தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு ஐ:ஓ.எம் நிறுவனம் விளையாட்டு உபகரணங்களை வழங் கவுள்ளது.

உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202)

## உதவித் தாதிப் பயிற்சி பெற விரும்பும் பெண்பிள்ளைகள்

**மருந்தாளர்கள்/பயிலுநர்கள் தேவை**

நேரில் வரவும் காலை 8-10 மணிவரை

**சம்பந்தன் மொடோர்ன் கிளினிக்**

இல.8 ஏ, இராமையாச்
செட்டியார் லேன், யாழ்ப்பாணம்.
தொ.பே.0212227259

## ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி

உலக இரட்சகரான யேசுவே நீசப் பாவிகளின் மேல்அளவில்லாத இரக்கம் உள்ளவரே. முடியாத காரியங்களைக் கைகூடப் பண்ணியவரே. எங்கள் யேசுவே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அடியாள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருந்திய அழைப்பும்



தோற்றம் 20.04.1948

மறைவு 12.08.2008

**அமரர் கனகசபை பாலசுப்பிரமணியம் (அம்மான் சின்னராசு)**

12.08.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் கனகசபை பாலசுப்பிரமணியம் அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (11.09.2008) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால்

மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

**திருமதி யோசப் சில்வானஸ் சைதனியதேவி**



காரைநகரைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோசேப் சில்வானஸ் சைதனியதேவி (தேவி) நேற்று (10.09.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் யோசேப் சில்வானஸ்சின் அன்பு மனைவியும், தினேஸ் (மலேசியா), யோசப், திலீப், டயானா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.09.2008) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், திருச்சபை மக்கள் (அங்கிலிக்கன் திருச்சபை, உரும்பிராய்) அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
தொ.பே.0774210088

தகவல்:
திலீப் (மகன்).

## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்



மணமுடித்த நாள் முதல்
மகிழ்வுடன் எனைக் காத்தவளே
தினம் உந்தன் நினைவுடனே
மனம் வாழுதே பூமியிலே

பாசமிகுந்த எங்கள் அம்மாவே
பாரினில் நின் மறைவின்
பதினைந்தாம் ஆண்டு வந்ததம்மா
பசுமையான நினைவுகளும்
-தோன்றுதம்மா

அன்பு காட்டி அமுதூட்டி எங்களை
அரவணைத்த அம்மாவே உன்னை
அனுதினமும் மறவாது
- வாழுகின்றோம்
ஆண்டவனை உனக்காகத்
-தொழுகின்றோம்

என்றும் எம் இதயத்தில்
- இருப்பவளே
எங்களைக் காக்கும் இதய தெய்வமே
ஆண்டு பதினைந்தின்
- நினைவுகளைச் சுமந்து
அஞ்சலி செய்கின்றோம்
- சாந்திபெறுவாயாக

நற்றுணை நின்ற நாயகி
அன்புள்ளம் கொண்ட அம்மா

**அமரர் திருமதி தங்கரத்தினம் சிந்தாமணி**

மண்ணில் உதயம் 10.03.1925 — விண்ணில் வீடு பேறு 27.08.1993

முக்கரா வெத்தை, ஊரிக்காடு.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
உறவினர், ஊர்மக்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டு இறைமையில் மட்டுமே அரசாங்கம் கவனம் தமிழ் மக்களின் உரிமைகள் மீது அக்கறையில்லை

## சம்பந்தன் எம்.பி. சபையில் சாடல்



கொழும்பு,செப்.11

தமிழ் மக்களின் உரிமைகள் மீது எந்த அக்கறையும் கொள்ளாமல் இலங்கையின் இறைமை மீது மாத்திரமே அரசு கவனம் செலுத்துகின்றது என்று விசனத்துடன் தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இதுகுறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்க இடமின்றி மரநிழல்களில் வாழ்கின்றனர். யுத்தம் மேலும் தீவிரமடையலாம், உயிரிழப்புகளும் பொருளிழப்புகளும் மேலும் அதிகரிக்கலாம்.

தொடரும் யுத்தத்தில் சுமார் இரண்டு லட்சம் மக்கள் இடம்பெயர்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இடம்பெறும் யுத்தம் வரலாற்றில் எங்கும் இடம்பெற்றிராத மிகவும் மோசமான ,தீவிரமான யுத்தமாகும். மனித உரிமை முற்றாக மீறப்படுகிறது. இலங்கை அரசு சர்வதேச சட்டங்களை இதன்மூலம் மீறுகிறது. இது எங்கே போய்முடியும் என்று சொல்ல முடியாது.

நாட்டின் இறைமை மீது மாத்திரமே அரசு கவனம் செலுத்துகிறது. மக்களின் உரிமையை ஒதுக்கிவிடுகிறது. நாட்டின் இறைமைக்குள் மனித உரிமையும் அடங்குகிறது என்பதை அரசு விளங்கிக்கொள்ளவேண்டும்.

பாரிய 16 மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஆணைக் குழுவிற்கு இந்த அரசு நிதியும் வழங்கவில்லை.

சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சட்ட மூலம் இரண்டு நாள்கள் நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டபோதிலும் அச்சட்டமூலம் சட்டமாக்கப்படவில்லை. அரசு அதை ஒதுக்கிவைத்துவிட்டது.

இவ்வாறு அரசு மனித உரிமையைப் பாதுகாக்கப் பின்னடிக்கிறது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறலுக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என்று சர்வதேச நாடுகள் கூறுகின்றன. ஆனால் அரசு அதைக் கவனத்தில் எடுப்பதில்லை.

எமது உரிமை மீறப்பட்டதால் நாம் தமிழீழத்தைக் கோருவதற்கு பலவந்தப்படுத்தப்பட்டுள்ளோம். நாம் சிங்களவர்களின் உரிமையைக் கேட்கவில்லை. அவர்களின் உரிமை வழங்கப்படவேண்டும். அதேபோல் தமிழ் மக்களின் உரிமைகளும் வழங்கப்படவேண்டும்.

நாம் இலங்கைக் கலாசாரத்துக்குப் பங்களிப்புச் செய்யவும் இலங்கை அடையாளத்தின் பங்காளியாக இருக்கவும் விரும்புகிறோம். ஆனால், சிங்கள அரசால் எம்மை அடிமையாக வைத்திருக்க முடியாது.

தற்போது வடக்கில் யுத்தம் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது. இதைப் பயன்படுத்தி நாடு முழுவதிலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. இந்த மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்த அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (சி)



நாடாளுமன்றிலிருந்து...

# புலிகளின் விமானம் வீழ்த்தப்பட்டது உண்மை எங்கே, எப்படி என்று எவரும் கேட்கக் கூடாது!

## ஊது அமைச்சர் கெஹலியவின் விளக்கம்

கொழும்பு,செப்.11

வுவனியா இராணுவ முகாமைத் தாக்க வந்த புலிகளின் இரண்டு விமானங்களில் ஒன்று தாக்கியழிக்கப்பட்டமை உண்மை என்றும் அது எப்படித் தாக்கியழிக்கப்பட்டது, எங்கு வைத்துத் தாக்கியழிக்கப்பட்டது என்ற கேள்வியெல்லாம் எவரும் கேட்கக்கூடாது என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா இராணுவ முகாம்மீது புலிகளால் நடத்தப்பட்ட விமானத்தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

புலிகளின் இரண்டு விமானங்கள் வந்து இத்தாக்குதலை நடத்தின. அப்போது விமானப்படையினர் 12 பேரும் பொலிஸ் ஒருவரும் சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டனர்.



அதிகாலை 3.28 இற்கும், 3.52 இற்கும் இடையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட எமது இரண்டு விமானங்கள் புலிகளின் இரண்டு விமானங்களையும் விரட்டித் தாக்கின.

புலிகளின் அந்த இரண்டு விமானங்களுள் ஒன்று அழிக்கப்பட்டது. முகாமைத் தாக்கவந்த 10 புலிகளும் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட புலி உறுப்பினர்கள்10 பேரின் சடலங்களைப் புலிகளிடம் ஒப்படைக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

புலிகளின் இரண்டு விமானங்களில் ஒன்று தாக்கியழிக்கப்பட்டமை உண்மை. ஆனால், எங்கு தாக்கப்பட்டது, எப்படித் தாக்கப்பட்டது என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்கக்கூடாது.

அப்படிக் கேட்பது எமது படையினரை அவமதிக்கும் செயலாகும். நாம் புலிகளின் தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்துள்ளோம் - என்றார். (சி)

# கடந்த மாத மோதல்களில் மாத்திரம் 155 படையினர் பலி, 983 பேர் காயம்

## சபையில் பிரதமர் தகவல்



கொழும்பு,செப்.11

கடந்த மாதத்தில் மட்டும் விடுதலைப் புலிகளுடனான மோதல்களின்போது முப்படையினர் மற்றும் பொலிஸாரில் 155 பேர் உயிரிழந்திருக்கின்றனர். 983 பேர் காயமடைந்துள்ளனர் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசர காலச்சட்ட நீடிப்பு பிரேரணையை நேற்றுமுன்தினம் சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் இப்போது மரணப் பிடியில் சிக்கியுள்ளனர். தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்போகிறோம் என்று சொல்லிக் கொண்டே புலிகள் ஆயுதம் ஏந்தினர். ஆனால் இப்போது அவர்களே பாதுகாப்புத் தேடுகின்றனர்.

மரணத்தின் பிடியில் சிக்கியுள்ள இந்தப் புலிகளைக் காப்பாற்ற தெற்கில் வயிற்றுப் பிழைப்பு நடத்தும் சிலர் முயற்சிக்கின்றனர். படையினரின் வெற்றியதைத் தடுக்க முற்படுகின்றனர்.

படையினரின் வெற்றியை ஒரு போதும் எவராலும் தடுக்கமுடியாது. தொடர்ச்சியான படை நடவடிக்கையாகவே வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலில் மக்கள் அரசுக்கு ஆணை வழங்கியுள்ளனர்.

புலிகளின் இந்தப் பயங்கரவாதத்தை அடுத்த தலைமுறைக்கும் விட்டுவைக்க நாம் விரும்பவில்லை. அதை நாம் இப்போதே அழித்தொழித்து விடுவோம்.

படையினர் மிகவும் விழிப்பாக இருப்பதனாலேயே தெற்கில் புலிகளால் நடத்தப்படவிருந்த பாரிய தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன.

இதனால், படையினரின் கவனத்தை திசை திருப்ப புலிகள் முயற்சிக்கின்றனர். இருப்பினும் படையினர் தொடர்ந்தும் விழிப்பாகவே உள்ளனர்.

இந்தப் படையினரின் வெற்றிக்காக - எமது தாய் நாட்டின் வெற்றிக்காக - நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

கடந்த ஒரு மாதத்தில் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற சண்டையின்போது முப்படையினரிலும் பொலிஸாரிலுமாக 155 பேரும் பொதுமக்களில் 04 பேரும் கொல்லப்பட்டனர்.

அதேபோல், படையினரில் 983 பேரும் பொதுமக்களில் 52 பேரும் காயமடைந்தனர்.

இருப்பினும் படையினரின் வெற்றியை ஒருபோதும் எவராலும் தடுக்கமுடியாது - என்றார். (சி)

# ராடர் நிலையம் முற்றாக அழிவு

## அம்பலப்படுத்துகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,செப்.11

வவுனியாவில் நேற்றுமுன்தினம் புலிகள் நடத்திய விமானத்தாக்குதல் மூலம் படையினரின் ராடர் நிலையம் அழிக்கபட்டுள்ளது என்று ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் செனவிரட்ண நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

சபையில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டநீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இடம்பெற்றுவரும் யுத்தம் தொடர்பாக அரசு பொய் கூறி வருகிறது. படைத் தரப்பில் ஏற்பட்டுவரும் இழப்புகளை அரசு மூடி மறைக்கின்றது.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்தும் நோக்கில் ஆயுதம் வாங்குவதற்காகவே வரவு - செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டது.

ஆனால், புலிகளின் விமானங்களை ஒழிக்கும் வகையில் அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அவர்களின் விமானம் அவ்வப்போது படையினர் மீது தாக்குதல் நடத்திவிட்டுப் போகிறது.

பயங்கரவாதம் ஒழிக்கப்படுவதற்கு நாம் எதிர்ப்பில்லை. படையினரின் வெற்றியை நாம் பாராட்டுகிறோம். அந்த வெற்றி படையினர்க்கே சொந்தம். அதை அரசு அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்தக் கூடாது.

யுத்தத்தில் கொல்லப்படும் படையினரின் எண்ணிக்கை தொடர்பாக அரசு பொய் கூறுகின்றது.

2006 முதல் இப்போதுவரை ஆயிரத்து 851 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 9,901 படையினர் காயமடைந்துள்ளனர். அவர்களுள் 5 ஆயிரம் படையினர் கால்களை இழந்துள்ளனர்.

இது உத்தியோகப்பற்றற்ற தகவல். உத்தியோகபூர்வ அறிக்கை வெளிவந்தால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும்.

வவுனியாவில் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலால் படையினரின் ராடர் நிலையம் அழிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை நடத்திய புலிகளின் விமானம் எப்படித் திரும்பிச் சென்றது என்று தெரியவில்லை - என்றார். (சி)

# அம்மாவுக்கும் மனம் உண்டு........ .... அவளை ஓய்வெடுக்க விடுங்கள்

**திலகா தர்மராசா.**

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை" என்பார்கள். தாய் தெய்வத்திற்கு ஒப்பானவள். உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் வாயிலிருந்து வரும் முதல் மழலைச் சொல் அம்மா. அம்மா என்று சொல்லும்போது உடல் புல்லரிக்கும். அந்தச் சொல்லுக்குத்தான் எத்தனை சக்தி உண்டு. தாய் என்ற ஸ்தானம் மிகவும் சக்தி வாய்ந்ததும் பொறுப்பானதும் ஆகும். பத்து மாதம் சுமந்து பெற்று, தன் உதிரத்தைப் பாலாக்கி, இரவு என்றும் பகலென்றும் பாராமல் ஊட்டி வளர்க்கிறார்கள். வயிற்றில் கருவைச் சுமந்தவுடன், என் குழந்தைக்கு இது கூடாது. அது கூடாது என்று தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்கிறாள்.

பெற்றவுடன் கண்ணுங் கருத்துமாக வளர்க்கிறாள். நல்ல பழக்கங்கள் வரவேண்டும், படிப்பு வரவேண்டும் என்று சொல்லிக் கொடுப்பாள். ஓரளவு வளர்ந்தவுடன் பாடசாலை அனுப்புகிறாள். பாடசாலையிலிருந்து வரும்வரை உணவை வைத்துக்கொண்டு வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பாள். இந்தக் குழந்தைப் பருவம் கடந்து பெரியவர்களானதும், பிள்ளைகள் என்ன படிப்பு படிப்பார்கள், டாக்டராவார்களா? ஆசிரியர்களாக வருவார்களா? என்று அல்லும் பகலும் சிந்திப்பாள்.

அப்பாடா, பிள்ளைகளின் படிப்பு முடிந்து வேலையாகிவிட்டது. இனித் திருமணம் செய்யும் படலம் வந்துவிட்டது என்று தேடத் தொடங்குவாள். அம்மா பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கை அமையவேண்டும் என்று கோயில்களுக்குப் போவாள். தெய்வங்களை வேண்டிக்கொள்வாள். பிள்ளைகளுக்குத் திருமணம் முடிந்து கணவரும் ஓய்வுபெற்றவுடன், அப்பாடா, எங்கள் பொறுப்புகள் ஒருபாடாகத் தீர்ந்தது என்று நிம்மதிப் பெருமூச்சு விடுவாள்.

ஆனால் சிறிதுகாலம் செல்லும் முன் அம்மா என் பிள்ளையைப் பார்த்துக்கொள்கிறாயா? நான் வேலைக்குப் போக, கடைக்குப் போக அல்லது வெளியூர் போக என்று வருவார்கள்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் நான்கு சுவருக்குள் அம்மாவையும் பிள்ளையையும் வைத்துவிட்டு வேலைக்குப் போய் விடுவார்கள். அம்மா என்றால் எல்லாம் செய்பவள்தான், வளர்ப்பது மட்டுமல்ல கஷ்டங்களை, மனஸ்தாபங்களை எல்லாம் தீர்த்து வைப்பாள். ஆனால் பிள்ளைகள் நன்றாக இருந்தால் மனநிறைவோடு பார்த்துப் பார்த்துப் பூரிப்படைப்பவளும் அம்மாதான்.

### அம்மாவுக்கும் மனமுண்டு

ஆனால் அம்மாவுக்கும் மனமுண்டு, அதில் சின்னச்சின்ன ஆசைகள் உண்டு என்று எண்ணிப் பார்க்கவேண்டும். அவளும் திருமணமான காலம் தொடக்கம் கணவனுக்காக, மாமனார், மாமியார், பிள்ளைகளுக்காக என்று மாடாய் உழைத்துத் தேய்ந்து சலித்துப் போயிருக்கிறாள். சிறிதுகாலம் ஓய்வுகொடுத்து அம்மாவின் ஆசைகளை [illegible]

கோயில் போக விரும்புவார்கள். அமைதியாக இருந்து பக்திப்பாடல் கேட்கவோ, பகவத்கீதை படிக்கவோ அல்லது படம் பார்க்கவோ, விரும்புவார்கள். இன்னும் சொல்லப்போனால், தன் வயதொத்தவர்களோடு பேசிப்பழக, பஜனைக்குப் போக, கலாட்சேபம் கேட்கப் போக என்றெல்லாம் விரும்புவார்கள். ஆனால் வீட்டிலோ பேரக்குழந்தையைப் பார்க்கவேண்டும், சமைக்கவேண்டும் என்று பார்த்து வாழும் அம்மாக்களும் உண்டு. சிலர் நேரமிருந்தாலும் அம்மாவைக் கோயிலுக்குக் கூட்டிப் போவதை விட, தங்கள் நண்பர்கள் வீட்டிற்குப் போவது சரியென்று எண்ணுவார்கள். அம்மாவும் வாரக் கணக்கில் வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறாள். வெளியில் கூட்டிப் போகவேண்டும் என்று எண்ணமாட்டார்கள்.

ஏன் புடைவைக் கடைக்குப் போனால்கூட அம்மாதானே, ஏதாவது ஒன்றை வாங்கிக் கொடுப்போம் என்று எண்ணுவார்களா? அவளுக்கும் தனக்கு விரும்பிய நிறத்தில், டிசைனில் புடைவை வாங்க ஆசையாக இருக்கும். இவைகள் எல்லாம் அம்மாவின் சின்னச் சின்ன ஆசைகள், பிள்ளைகளிடம் எப்படிக் கேட்பது? எத்தனையோ தேவைகளை இளமையில் நிறைவேறாத ஆசைகளை எல்லாம் மனதில் பூட்டி வைத்திருப்பார்கள். ஐம்பதிலும் ஆசை வரும் உடலுக்குத் தான் வயது; மனதுக்கு அல்ல. மனம் என்றும் இளமையாகத்தான் இருக்கும்.

நீங்களும் பெற்றோராகிவிட்டீர்கள். உங்களுக்கும் வயதாகி, பேரக்குழந்தை பார்க்கும் நிலை என்று வரலாம். சிந்தித்துப் பாருங்கள். அம்மா எனக்கு எப்படியெல்லாம் பாடுபட்டார்கள். பக்கபலமாக இருந்தார்கள். நான் அம்மாவை நன்றாகப் பார்த்தேனா? அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றினேனா? வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட அம்மாவை ஆறுதலாக இருக்கவைத்து உபசரித்தேனா? என்று.

### அம்மாவை ஓய்வெடுக்க விடுங்கள்


அம்மாவுக்கும் வயதில் முதிர்ச்சி, தள்ளாமை, சோர்வு ஏற்படலாம். அவர்களுக்கும் ஓய்வு முக்கியம். அம்மாவை நன்றாக ஓய்வெடுக்க விடுங்கள். அவர்களின் புத்திமதிகளை, அபிப்பிராயங்களைக் கேளுங்கள். அம்மாவுக்கு வயதாகிவிட்டது என்ன தெரியும் என்று எண்ணாதீர்கள். பெற்றவர்களுக்கு மதிப்புக் கொடுங்கள். முதுமைக்கு உள்ள திடம் இளமைக்கு கிடையாது.

தாயின் மனம் குளிரக் குளிர, எங்களை வாழ்த்துவாள், ஆசீர்வதிப்பாள். மானிட வாழ்க்கையில் குழந்தையில்லாதவர்கள் குழந்தை தத்து எடுக்கலாம். ஆண்கள் பல மனைவிகளைத் தேடலாம். ஏன் விதவைகூட மறுமணம் செய்தால் கணவன் கிடைக்கலாம். ஆனால், பெற்ற தாய், தந்தை, சகோதரர் இவர்களை ஒருமுறை தான் பெறலாம். ஆகையால் வாழ்க்கையில் பெற்றோரையும் சகோதரர்களையும் போற்றி மதிப்பதை என்றும் கடைப்பிடிக்கவேண்டும்.

அமரர் திலகவதி தர்மராசா எழுதிய இந்த ஆக்கம் 1999ஆம் ஆண்டில் கனேடிய தமிழ்ப் பத்திரிகையில் பிரசுரமாகியதோடு கனேடிய வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது. அமரரின் மூன்றா[illegible]மான இன்று அவரது ஞாபகார்த்தமாக இங்கு வெளியிடப்படுகின்றது.

(எட்டாம் பக்கமும் பார்க்க)(ஆ-10100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெல்லிப்பழை துர்க்

# தேர்த் திருவிழாச் சிற

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் பூர்வீகச் சிறப்பும் இன்றைய எழுச்சிப் பெருநிலையும்

அருள்மிகு அம்பிகையின் எழில்மிகு தோற்றத்தை இன்று தெல்லிப்பழை துர்க்காபுரப் பகுதியிலே ஆயிரமாயிரம் உள்ளங்கள் ஒன்றுபட்டுத் தரிசிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் வடபால் காங்கேசன்துறைப் பெருந் தெரு வழியே எட்டாவது மைல் கல் தொலைவில் அமைந்திருக்கும் இவ்வா லயம் துர்க்கை அம்பாளின் பரிபூரண சக்தியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான பழமை சார்ந்தது இவ்வாலயம் ஆகும்.

யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழையில் உள்ள உழுகுடைப்பதி வவுனாவத்தையிலே சைவமரபிலே வந்த பெரியார் கதிர்காமர். இவர் சிறந்த சைவக் குடியில் தோன்றியவர். இளமையிற் கற்பன கற்றும் கேட்பன கேட்டும் சைவ நெறிபற்றியேஒழுகினார். தலயாத்திரைபுரிவதில்பக்தியும்சிரத்தையும்உடையவராக விளங்கினார். பொதுவாக இலங்கையிலுள்ள சைவக்கோயில்களெல்லாம் முற்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே தடையின்றி நடைபெற்றபிரயாணத் தொடர்பின் மூலமாகவே விருத்தியடைந்துள்ளன என்பது பிரசித்தம். இவ் வகையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளே இத் திருக் கோயிலின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏதுவாயிருக்கின்றன.


ஏறக்குறைய 1750ம் ஆண்டளவில் கதிர்காமர் தல யாத்திரைக்காகப் புறப்பட்டுக் காங்கேசன்துறையில் தோணியேறித் தென்னிந்தியா சென்றடைந்தார். அவர் அங்கிருந்துபாதயாத்திரையாகத்தலவழிபாடுசெய்துகொண்டு காசிவரைசென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறைய பத்துவருடங்கள் கழிந்தன. இக்காலவெல்லைக்குள் அவர் ஒரு துர்க்காதேவி உபாசகராகவும்மாறிவிட்டார். அதனால்ஏறக்குறைய 1760 ஆம் ஆண்டளவில் தாம்யாழ்ப்பாணம்திரும்பும்போதுதுர்க்காதேவி இயந்திரமொன்றும்வெண் கலத்தினாலமைந்த 'திருமுகக்கெண்டி' உருவமொன்றுங் கையோடு கொண்டுவந்தார்.

காசியாத்திரையை முடித்துக் கொண்டு காங்கேசன்துறையை வந்தடைந்த இப்பெரியார் கீரிமலையில் தீர்த்தமாடி அங்கிருந்து நடந்து மூன்று மைல் தூரத்திலுள்ள தெல்லிப்பழை நோக்கி வந்து கொண்டிருந்தார். திருவருள் அவரது நடையில் தளர்வை தோற்றுவித்தது. நடைதளர, உடல் தளர அங்கிருந்த இலுப்பைத் தோப்பிலே இளைப்பாறினார். திருவருள் கருணையால் அவர் முன் ஒரு சோதி தோன்றி, அவர் கொண்டு வந்த துர்க்கா சக்கரத்தை அங்கே தாபிக்குமாறு ஆணையிட்டது. அவ்வாணையைச் சிரமேல் தாங்கி, மரத்தடியிலே சக்கரத்தை அமைத்து வழிபடத் தொடங்கினார். ஆயின், தெல்லிப்பழை உழுகுடைப்பதி இலுப்பைத் தோப்பிலே நாகசர்ப்பங்கள் வருவதுண்டு. அவை பூசை முடிந்தவுடன் மறைந்துவிடும். வெளிப்படத் தோன்றும் காலங்களிலும் பிறகாலங்களிலும் யாரையும் அச்சமுறும் அளவிற்குங்கூட நாகங்கள் நடந்து கொண்டதில்லை. பூசை காலத்திலே குருக்கள் பாம்புகளுக்குப் பாலும், பழமும் வைத்து வழிபடலும், அவை அவற்றை உட்கொள்ளலும் உண்டு. கதிர்காமர் தாம் கொண்டு வந்த இயந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் தாபனம் செய்து வழிபட்ட இடமே இன்று துர்க்காதேவி தேவஸ்தானமாக வானளாவும் கோபுரமும் அலங்கார வளைவு கொண்ட நுழைவாயிலும் அழகிய தெப்பக்குளமும் எழிலூட்டி நிற்கக் காட்சி தருகிறது.

ஏறக்குறையநூற்றிஐம்பது ஆண்டுகளுக்கு முன்புகாஞ்சிபுரத்திலிருந்துவந்த அந்தணப்பெரியாரொருவர் குறித்த உழுகுடைப்பதியில் ஒரு மரத்தடியில் வந்திருந்து அயர்ந்து உறங்குவாராயினர். அக்காலத்தில் அப்பகுதிப் பெரியார்களில் ஒருவரான நாகநாத உடையாரின் சொப்பனத்திலே அம்பாள் தோன்றித் தன்னையும் அந்தக் காஞ்சிபதி அந்தணரையும் ஆதரிக்குமாறு உணர்த்தியருளினார். அதற்கமைய நாகநாதஉடையார் ஆலயத்தையும் அந்த அந்தணரையும் ஆதரிக்க முற்பட்டார். அந்த அந்தணரையே ஆலய அர்ச்சகராக நியமித்து வைத்தார். அந்த அந்தணருடைய சந்ததியினரே இன்றும் இக்கோயிலின் அர்ச்சகர்களாக இருந்து வருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலோடு இவ்வாலயத்துக்குப் புராதன தொடர்புண்டு என்பதைப்பழைய ஏட்டுப் பிரதிகள் குறிப்பிடுகின்றன. மாவை முருகன் ஆலயத்தில 1815 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனை அடுத்து 1820 இல் துர்க்காதேவி ஆலயத்தில் மகா கும்பாவிஷேகம் நடைபெற்றது. 1829 ஆம் ஆண்டுபுரட்டாதி விஜயதசமி அன்று மாவை முருகன், துர்க்காதேவி ஆலயத்திற்கு எழுந்தருளி வந்து கன்னிவாழைவெட்டும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. அன்று தொடக்கம் இன்றுவரை இவ்விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

இக்கோயிலில் பிரபல்யமாயிருந்து வந்த மற்றொரு நிகழ்ச்சி புராணபடனமாகும். வருடந்தோறும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகியன கிரமமாகப் படிக்கப் பெற்று வந்துள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல அறிஞர்கள் பலரும் இப்படிப்புகளிற் பங்குபற்றியுள்ளார்கள். புராணபடனம் 1958ம் ஆண்டு தொடக்கம் வருடந்தோறும் மூன்று பெரும் புராணங்களும் படிக்கப்பட்டு உரைவிரித்துப் பயன் கூறி வருவது குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் இப்பூர்த்தி விழா நடைபெற்றுவருகின்றது. இதனையடுத்து பன்னிரு திருமுறைகளும் படிக்கப்பட்டு, தினமும் முந்நூறு பாடல்களாக ஓதி ஆடிச்சோதியில் திருமுறைப் பூர்த்தி விழாவை நடாத்தி ஓதுவார்களுக்குக் கௌரவமளிக்கப்படுவது வழக்கம். இந் நிகழ்ச்சிகளில் வழக்கமாக அடியார்கள் பங்குகொண்டு தங்கள் பொழுதைத் தெய்வீகப் பொழுதாகப் பேணிக் கொள்கின்றனர். ************************



## தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்கை

"அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிகவரம் பெறலாம்" ஈழத் திருநாட்டிலுள்ள சக்தி தலங்களில் தனித்துவம் பெற்ற பெருங் கோயில்களில் ஒன்றாக தெல்லிப்பழைத் துர்க்கையம்மன் கோயில் விளங்குகிறது. முந்நூறு வருட காலப் பழமை வாய்ந்த இத் திருக் கோயிலின் மகத்துவத்தை அறியாதவர்களில்லை. காசியில் தவம் செய்த 'ஞானி' கதிர்காமர் அவர்களின்

## சாந்தியும் சமாதானமும் அருளட்டும் அம்பிகை



ஆதி சக்தியின் அம்சமும், முப்பெரும் தேவியிலே முதல் தேவியாக விளங்குகின்ற ஸ்ரீ துர்க்கா தேவியின் இரதோற்சவ நாளாகிய இன்றைய நாளிலே அகிலமதில்வாழ்கின்ற அனைத்து இன மக்களும் சாந்தி சமாதானமாக எல்லாச் சிறப்புக்களும் பெற்று, அம்பிகையின் திருவருளோடு நலமாக வாழ நல்லாசி கூறி பிரார்த்திப்போமாக.

வா. அகிலேஸ்வரக் குருக்கள்.
(பிரதம சிவாச்சாரியார்)
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், து[illegible]புரம்,
தெல்லிப்பழை.

பேபெ[illegible] இத் தி விழா யத் த உள்ள செய் களில் செல் களின் புதத் தலத் யிரம் நாள். அம்ப னல் வழி தவிக் வோ சூழல் டும் அகில திக்க வோம்


ஜெயராஜ்
கல்லுடைக்கும் ஆலை
கே. கே. எஸ். வீதி,
தெல்லிப்பழை.



தேவியின் திருப்பாதம் போற்றி!
தேர்த் திருவிழாச் சிறப்புற வாழ்த்தும்
ஆனந்தி சிற்பாலயம் பாம் அல்கோ
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

துர்க்கா
கல்லுடைக்கும் ஆலை
கே. கே. எஸ். வீதி,
தெல்லிப்பழை.

குணம் கிறீம் ஹவுஸ்
குளிர்பானங்களின் விற்பனையாளர்
உரிமையாளர்: பே.தேவதிரவியம்
160, துர்க்காபுரம், தெல்லிப்பழை.
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

பெஷன் மோட்டோர்ஸ்
மோட்டார் சைக்கிள், ஆட்டோ ஆகியவற்றின் உதிரிப்பாகங்களுடன் T.V அன்ரனா, பெயின்ற் வகைகள், கட்டடப் பொருள்கள் ஆகியவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ்.வீதி, மானிப்பாய்.

பல் பெ
மொத்தமாக விலைக்கு பெ
நா
- உரிமை
கே.கே

"ஜீவாகரம்" JEEVAKARAM
★ வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும் ★ கர்ப்பிணித் தாய்மார்களுக்கும்
★ பாலூட்டும் தாய்மார்களுக்கும் ★ போஷாக்குக் குறைவான குழந்தைகளுக்கும்
இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஒரு உப உணவாகும்.
இவ்வித்தரசிகளே அன்னை கோப்பி
தயாரிப்புக்களை வாங்கி பாவித்து இன்புறுங்கள்!
அன்னை தொழிற்சாலை இணுவில்.

துர்க்கா பொத்தகச் சோலை
புதினப் பத்திரிகை முகவர். தரமான றப்பர் முத்திரைத் தயாரிப்பாளரும் புத்தக விற்பனையாளரும்.
நீதினி முகவர் சேவை, கடுகதி மற்றும் பதிவுத் தபால் சேவைகளும் இடம் பெறுகின்றன.
WESTERN UNION ®
பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.
T.P 222 6267

சந்த
அபான்ஸ் வி
யாழ்.வீதி,

அன்னையின் கடைக்கண்கள் அகிலத்தைக் காக்கும்
தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம் (வ-து)
கூட்டுறவு
* கிராமிய வங்கிச் சேவை
* சுயதொழில் கடன்
* விவசாய சேவை
* இரும்பு விற்பனை நிலையம்
* மின் புரமைப்புச் சேவை
* கூட்டுறவு கல்வி அபிவிருத்தி
* வாகன சேவை
* நுகர்ச்சிச் சேவை
* சிற்றுண்டிச் சாலை
* நிழற்பிரதி சேவை
* கட்டட ஒப்பந்த வேலை
* தொலைத் தொடர்பு சேவை
* புடவை விற்பனை நிலையம்
* கூட்டுறவு நகர்
உள்நாடு:
021 222 3053
021 222 3054
வெளிநாடு:
0094 - 212223053
0094 - 212223054, 060 -2212341
பதிவு இல. J/1558/12.03.1971
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

அன்னையின் திருவருள் அனைத்து மக்களுக்கும் கிடைத்திட தேரேறி வருக....!
சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
எமது சேவைகள்



⇨ நுகர்ச்சிப் பொருள்கள் விற்பனை
⇨ புடவை விற்பனை நிலையம்
⇨ பாதணி விற்பனை நிலையம்
⇨ கூட்டுறவு நகர்
⇨ கிராமிய வங்கிச் சேவை
⇨ ஜகபி பழத் தொழிற்சாலை உற்பத்திப்பொருள்கள்
(நெல்லிரசம், திராட்சைக் கோடியல், கோடியல், ஜாம், ஊறுகாய், மோர் மிளகாய்)
⇨ சிற்றுண்டிச் சாலை
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.


பாடசாலை
தலைப்ப
பிளாஸ்ரிக்
சிறு




JAFFN


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ர்க்காதேவி ஆலய ...றப்புமலர் - 11.09.2008





## தெல்லிநகர் துர்க்கை அம்பாள் இன்று சித்திரத் தேரிலே பவனி வருகிறார்

வரலாற்றுப் பெருமையும், வழிபாட்டுப் பெருமையும் கொண்ட தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேவஸ்தான வரலாறு புராதனமானது. துர்க்கை அம்பாள் சங்கு, சக்கரம் ஏந்திய திருக்கரங்களோடு சர்வ உலக மக்களையும் காப்பற்றி வருகின்றஓர் அற்புதத் தெய்வம்.

தெல்லிப்பழை என்ற இடப்பெயருக்குக் காரணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கட்டுவதற்கு வந்த மாருதப்புரவீகவல்லி தங்கி இருந்த இடம் எனக் கொள்ளப்படுகின்றது. தெல்லிப்பழைக் கிராமம் பற்றிய பல செய்திகளுக்கு ஈழமண்டல சதகம் நூல் சான்று தருகின்றது. அத்துடன் சட்டத்தரணி தெல்லிப்பழை வ.குமாரசாமி அவர்கள் துர்க்கை அம்மன் பற்றிய வரலாறுகளை 1935 ஆம் ஆண்டில் எழுதி ச் சென்னையில் வெளியிட்டுள்ளார்கள். மாவைக் கந்தப் பெருமான் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்கு விஜயதசமி அன்று மானம்பூ உற்சவத்திற்கு வருகை தரும் வழமை பாரம்பரியமானது.

துர்க்கை அம்பாளை நினைக்கின்ற போது தமக்கென தொண்டு ஆற்ற அம்பாளிடம் இருவரைப் பெற்றோம். ஒருவர் ஆலயபரிபாலனத்தை தனிமுகாமைத்துவத்தில் இருந்து பொதுமக்கள் பரிபாலனம் செய்ய சபையை நிறுவி தர்மசாதனம் செய்த பெருவள்ளல் சைவப்பெரியார் நாகநாதர் அவர்கள். மற்றையவர் இந்த நூற்றாண்டின் சைவத் தமிழ் மக்களின் ஆன்மீக வழிகாட்டி ஏகப்பிரதிநிதி சிவத்தமிழ்ச் செல்வி அம்மா. தேவஸ்தான வளர்ச்சிப் பணியை அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலம் தன்நிகரில்லாத தனிப்பெருந்தலைவியாக தொண்டாற்றி பொற்காலம் அமைத்தவர். அம்மாவின் பணிகள் யாவும் அனைவரும் அறிந்ததாகும். மங்கையர்க்கரசியாரைப் போல மனோதிடமும், திலகவதியாரைப் போல தியாக சிறப்புக்களையும் கொண்டவர் சிவத்தமிழ் செல்வி அம்மா.

அம்மா அவர்கள் தமது ''கணீர்'' என்ற குரலினால் சைவ சமூகத்தையும், தமிழ் சமூகத்தையும் சுற்றமாகக் கொண்டவர். இவர் தமது தலைமைப்பதவி பெற்றவுடன் ஆரம்பித்த திருப்பணி சித்திரத்தேர்த் திருப்பணி. சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா 1978 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்தச் சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பச்சக்கரவர்த்தி கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களை நினைவு கூராமல் இருக்க முடியாது. இவர் ஈழநாட்டில் உள்ள பல கோயில்களில் பெருந்தேர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

சித்திரத் தேர் திருப்பணி ஆரம்பமாகிய வேளையில் சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களுக்கு பக்கபலமாக நின்றவர்கள் பலர். இவர்கள் அனைவரும் அம்மா அவர்களின் திருப்பணிக்குத் தோளோடு தோள் நின்றவர்கள். அம்மா அவர்களின் வலதுகரங்களாக நின்றவர்களில் ச.ஆறுமுகநாதன், ஆ.க.கணேசரத்தினம், க.தணிகாசலம், த.பொன்னம்பலம் என்பவர்களைக் குறிப்பிடலாம். சித்திரத்தேர் சிறப்புற மலேசியா, சிங்கப்பூரில் இருந்து வர்ணப்பூச்சு மைகளை தெல்லிப்பழைக்கு பாதுகாப்பாகக் கொண்டுவர உதவிக்கரம் நீட்டியவர், பரோபகாரமணி கே.கே. சுப்பிரமணியம் அவர்கள் எனக் குறிப்பிடும் போது காரைநகர் பெருமை கொள்கின்றது.

தேர்விழா ஒரு சமுதாய மேம்பாட்டுவிழா. தேரின் தத்துவம் கீழ் ஏழு உலகம், மேல் ஏழு உலகம் அண்டத்தோடு ஒப்பிட்டு விசாரம் செய்யப்படுகின்றது. தேரில் அமைந்துள்ள சிற்பக்கலை, ஓவியக்கலை, கவின்கலை என்பன சைவமக்களின் வாழ்வோடு கலந்தவையாகும்.

சிவத்தமிழ்ச் செல்வி அம்மா சமுதாய வெள்ளத்தில் புகுந்து தம்பணிகளால் பெருமை பெற்றவர். சமுதாய சேவையை குற்றம் இல்லாத பணியாகச் செய்து உலகினால் நேசிக்கப்பட்டு நாநிலம் போற்றிய சிவத்தமிழச் செல்வி அம் மாவை நாம் இழந்த ஆண்டு இந்த ஆண்டு. இவ் வாண்டிலே நடைபெறுகின்ற சித்திரத் தேர் விழாவிலே அம்பாளை வழிபடுவோம். கொற்றவைத் தெய்வமாகிய துர்க்கை அம்பாள் நம் நாட்டுக்கு அமைதிதர அம்பாளை வேண்டிப் பிரார்த்திப்போமாக. - கா.சிவபாலன்

### அமைதி பூக்க அருள்க தாயே!

கங்கையைத் தலையிற் சூடி
களிநடம் புரியும் ஈசன்
பங்கயற் செல்வி யோடும்
பார் புகழ் மைந்த ரோடும்
தங்கமா மனது கொண்டு
தளிப் பெருங்கோயில் கண்டு
திங்கள் போல் திகழும் நல்ல
திருத்தலத் திருந்த வாறு
பங்கமது தமிழுக் கென்றால்
பழியதும் தனக்கே என்றாள்
அங்காறு திரு முருகனாரும்
அன்னையே அனைத்து மென்றார்
எங்குமே அமைதி பூக்க
எழில் பெற அருள் செய்வாயே!

- விகடகவி

### தேரேறி வருகின்றாள் எங்கள் துர்க்கை அம்மா

ஆவணியில் தேரேறி வருவாயம்மா!
ஆறுதலை தந்தெமையும் ஆள்வாயம்மா!
உவகையுற எமை வாழ வைத்தாயம்மா
உயர்தெல்லி ஊரமர்ந்த துர்க்கையம்மா,
புவனம் எங்கும் உன் புகழே பாடிப்பாடி
புகழுடனே திசை எட்டும் வாழும் மைந்தர்
தவமான தெல்லி இந்து இளைஞர் நாமும்
தேசுடனே உன் புகழைச் சொல்வோம் அம்மா!

இந்து இளைஞர் சங்கம்,
தெல்லிப்பழை

### துர்க்கை அம்பாள் திருத்தேர் காண வாரீர்

பேரொளியால் இலுப்பஞ்சோலையில் உதித்தது இத் திருக்கோயில். மாவைக் கந்தன் மானம்பூத் திருவிழாவில் நாடி வந்து அருள்பாலிக்கும் புண்ணியத் தலம் இது. அமுது தேடி வரும் அடியார்களின் உள்ளக்குமுறலை ஏற்று அவர்களை ஆறுதல் செய்யும் அம்பாளின் திருவருளைப் போற்றாதவர்களில்லை. தெய்வத்தாய் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆற்றுப்படுத்தலில் அறங்காக்கும் அற்புதத் தலமாக எழுச்சி பெற்ற தலம் இது. இத் திருத்தலத்தில் இன்று பெருந் தேர்த்திருவிழா. பல்லாயிரம் பக்தர்கள் ஒன்றுகூடிப்பிரார்த்திக்கும் திருநாள். இத் திருநாளில் அனைவரும் ஒன்றுகூடி அம்பாளை மன்றாடுவோம். எம் மண்ணில் இன்னல் அகன்று இடர் இன்றி அனைவரும் வாழ வழி கேட்போம். அகதிகளாக அல்லற்பட்டுத் தவிக்கும் எம் மக்கள் ஆறுதல் பெற வேண்டுவோம். விரைவில் எம் மண்ணில் சமாதானச் சூழல் உருவாக சஞ்சலம் போக்கும் அன்னையிடம் வேண்டுதல் செய்வோம். அறங் காக்கும் அகில நாயகியை அனைவருக்குமாகப் பிரார்த்திக்க தெல்லி நகரில் ஒன்றுபட்டு வழிபாடு செய்வோம் வாரீர்.

ஆறு. திருமுருகன், தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

### இனிதுமே அருள்கவே!

குன்றிலிட்டொளிர் தீபமாய் நின்புகழ்
குவலயந் தொறும் நின்று ஒளிரவும்,
மன்றிருந்திரு கற்றவர் மற்றவர்
மனம் மகிழ்ந்து தேவினும்மை மதிக்கவும்
நின்று நீடு பல்லாண்டுகள் வாழ்ந்துமே
தெல்லிப்பழையில் சிறப்புற்று விளங்கிட
என்றும் அன்னையாம் துர்க்கையின்
இன்னருள் எய்தி நீவிர் இனிதுமே அருள்கவே.


**மெடிலாண்ட்**
ஆங்கில மருந்துகள் விற்பனையில் முன்னோடி நிறுவனம்
ஆலடிச் சந்தி, மானிப்பாய். | பிரதான வீதி, சங்கானை.

**ரித்திக்கா பல்பொருள் வாணிபம்**
பலசரக்குப் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
பொன்னாலை வீதி, மானிப்பாய்.

**சாரியாத் மிக்சர்**
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யுமிடம்.
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

**சண்யோ கோரி**
பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

**பரணிகா மல்ரி சென்ரர்**
பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.
கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

**ஜீவா ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம் மற்றும் புதினப் பத்திரிகை முகவர்.
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**கிருபா போட்டோ**
புதினப் பத்திரிகை முகவர்
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**ஜனா பாம்**
பால் மற்றும் பால் உற்பத்திப் பொருள்கள் சுத்தமான பசு நெய் விற்பனை நிலையம். ஓடருக்கு கேக் வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**கண்ணன் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம் மற்றும் புதினப் பத்திரிகை முகவர்.
மானிப்பாய், கட்டுடை.

**ரஞ்சன்ஸ்**
கட்டடப் பொருள்களின் விற்பனை நிலையம்.
மருதடிப் பிள்ளையார் கோயிலடி, யாழ் வீதி, மானிப்பாய்.

**769**
தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம்
தெல்லிப்பழை.

**ஐங்கரன் மோட்டோர்ஸ்**
மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோ, நீர் இறைக்கும் இயந்திரங்கள், சைக்கிள்கள் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ் வீதி, மானிப்பாய்.

**சயன் உணவகம்**
சகல விதமான உணவு வகைகளையும் குறித்த நேரத்தில் ஓடருக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.
உரிமையாளர்: ரவி
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**சந்திரா வர்த்தக நிலையம்**
ஆனைக்கோட்டை.

**ஜெயதுர்க்கா நகைத் தொழிலகம்**
காலத்துக் கேற்ற வகையில் புதிய டிசையின்களில் 22 கரட் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.
ஸ்ரேசன் றோட், மல்லாகம்.

**துவாரகா பல் பொருள் வாணிபம்**
மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலைக்கு பொருள்களைப் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.
- உரிமையாளர்: பரமேஸ்வரன்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.

**...ந்தர்சன்**
...ஸ் விற்பனையாளர்
...வீதி, மானிப்பாய்.

**COST CUTTER**
SUPER MARKET,
SANDILIPAY.

பாடசாலை உபகரணப் பொருள்கள், பிளாஸ்ரிக் கதிரை வகைகள், அழகு சாதனப் பொருள்கள் தலைப்பாக்கள், தலைச்சோடனைகள், நாட்டியப் பொருள்கள், எவர் சில்வர் பொருள்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், காரியாலயப் பொருள்கள், பேபி கிட் வகைகள், சப்பாத்து வகைகள், சிறுவருக்கான சைக்கிள் வகைகள், சிறுவருக்கான விளையாட்டுப் பொருள்கள்.



வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**மது பான்ஸி ஹவுஸ்**
**பிள்ளையார் களஞ்சியம்**
பல்பொருள் வானிபம்
யாழ்.வீதி, மானிப்பாய்.
JAFFNA STREET, MANIPAY.
Tel: 021 222 7543


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மூத்தோருக்கான தேவாரப் பண் பயிற்சி

அகில இலங்கை திருமுறை மன்றம் நல்லூர் தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மடாலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் நல்லூர்த் தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மடாலயத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மு.ப.10 மணிக்கும் புதன்கிழமைகளில் பி.ப. 4.30 மணிக்கும் மூத்தோருக்கான தேவாரப்பண் பயிற்சியை வழங்கி வருகின்றது.

தெய்வத் தமிழிசைச் செல்வர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் இந்தப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றார். (50)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 25 | 06 |
| 06 | 09 |
| 1950 | 2003 |



அமரர் **செல்லையா யோகேஸ்வரன்**

(முன்னாள் அதிபர் - புத்தூர் மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை)

*திதி:பூர்வபட்ஷ ஏகாதசி (11.09.2008)*

அன்பாய் பேசி பண்பாய் வாழ்ந்த - எம் குடும்ப விளக்கே
ஆண்டுகள் ஐந்து ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
காலங்கள் மாறலாம் கோலங்கள் மறையலாம்
கடைசியாய் நிலைத்திருக்கும் உம் நினைவுகளுடன்
ஐந்தாண்டுத் திதியில் உமை நினைத்து வணங்குகின்றோம்.

*03ஆம் கட்டை,*
*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**


**IMS**
**Market Lane, Manipay**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

★ MS. Office.
★ Visual Basic.
★ Oracle 8i.
★ Computer Hard Ware.
★ DTP.
★ Java.
★ C++.

**1500/=**

*10.09.08 தொடக்கம் 10.10.08 வரை*
*அனைத்துப் பாடநெறிகளுக்குமான கட்டணம் 1500/= மட்டுமே. (பதிவுகளுக்கு முந்துங்கள்).*

**Institute of Micro Systems**


## வாழ்வக நிறுவுநர் நினைவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், செப்.11

வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் நடத்தும் வாழ்வக நிறுவுநர் நினைவு நாளும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வாழ்வகத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆ. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், உடுவில் பிரதேச செயலர் திருமதி எஸ். மஞ்சுளா தேவி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நூலின் வெளியீட்டு உரையினை யாழ். பல்கலைக் கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் நிகழ்த்துவார். யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரி.கலாமணியும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வார்.

## 25ஆவது திருமண நிறைவு விழா



**திரு.திருமதி சி.அம்பிகாபதி சற்குணவதி**

இன்று (11.09.2008) வியாழக்கிழமை
வெள்ளி விழாக்காணும் எம் பெற்றோரை சீரும் சிறப்பும்
பெற்று வாழ உளம் கனிந்து வாழ்த்துகின்றோம்.

*பெரியவிளான்*
*இளவாலை.*

வாழ்த்துபவர்கள்:
**பிள்ளைகள், மருமக்கள்.**

## நெஞ்சம் அகலாத நினைவுகள்

31ஆம் நாள் நினைவு அஞ்சலியும்
வீட்டுக் கிருத்திய அழைப்பும்



திருமதி சத்தியமூர்த்தி அம்பிகை

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 22.03.1943 | 12.08.2008 |

11ஆம் மாத நினைவஞ்சலி



அமரர் சின்னையா சத்தியமூர்த்தி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 08.10.1934 | 13.10.2007 |

கடந்த 12.08.2008 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.09.2008) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"சத்தியகிரி",*
*பண்ணாகம், சுழிபுரம்.*

**திருமதி துரைராசா நவமணி**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**


## A/L 2008 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

DMI கல்வி நிறுவனமானது, அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கு விசேட கட்டணச்சலுகையை வழங்குகின்றது.

- **Diploma in Microsoft Office**
- **Diploma in PC Application**
- **Diploma in Computerized Accounting**
- **Adv. Dip. in Hardware & Networking**
- **Dip. in Pre-Press Desktop Publishing**
- **Dip. in Web Designing & Development**
- **Dip. in Video Production & Multimedia**

வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான

Tally

*The qualification for success*

சம்பளப்பட்டியல் மற்றும் VAT கணக்குகளையும் உள்ளடக்கி முழுமையான Tally9 கணக்கீட்டு மென்பொருள் கற்கைநெறி

JOIN WITH LEADERS IN ACCOUNTS

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
10/09/2008 , 14/09/2008 , 15/09/2008 , Time:10.00 a.m.

**DMI COMPUTER EDUCATION**
DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.


ஓம் சிவமயம்
சித்திர வேலவர் துணை

## வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில்

### கோப்பாய்

ஆலய தர்ம பரிபாலன சபையின் 31.08.2008 ஆம் திகதிய கூட்டத் தீர்மானத்திற்கமைய மகாசபைப் பொதுக் கூட்டத்தை முன்னிட்டு

### 2007ஆம் ஆண்டுக்கான அங்கத்துவ உறுப்புரிமையைப்புதுப்பித்தல்

ஆலய மகா சபைப் பொதுக்கூட்டத்தை அண்மையில் நடத்துவதற்கு முன்னோடியாக மேற்படி மகாசபை அங்கத்துவத்தை 2008ஆம் ஆண்டுக்கு புதுப்பித்துக் கொள்ளுமாறு அங்கத்தவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

1. புதிதாக அங்கத்துவம் பெற விரும்பும் அடியார்கள் ரூபா நூற்றியிருபது (120/=) செலுத்தி அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ளவும்.
2. ஏற்கனவே அங்கத்துவ பணம் செலுத்தி அங்கத்துவம் பெற்றவர்கள் ரூபா அறுபது (60/=) செலுத்தியதை புதுப்பித்துக் கொள்ளவும்.
3. ஆயுட்கால அங்கத்துவம் பெற்றுக்கொள்பவர்கள் ரூபா ஆயிரம் (1000/=) செலுத்தி அங்கத்துவத்தை பெற்றுக் கொள்ளவும்.
4. புதிய உபயகாரர்களாக இணைந்து கொண்டவர்கள் அங்கத்துவ பத்திரத்தைப் பெற்று பூரணப்படுத்தி அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:

- அங்கத்துவத்தை பெறுபவர்களும் புதுப்பிப்பவர்களும் 10.10.2008ஆம் திகதிக்கு முன் தமது அங்கத்துவக் கடமைகளை மேற்கொண்டு அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
- அங்கத்துவத்திற்கு பணம் செலுத்துபவர்கள் அலுவலகத்திலோ அல்லது பொருளாளர் திரு.க.சின்னராஜன் அவர்களிடமோ பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- அங்கத்துவத்தை புதிதாக பெறுபவர்கள் அலுவலகத்திலோ அல்லது செயலாளர் திரு.சோ.விஸ்வலிங்கம் அவர்களிடமோ விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைத்து அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**திரு.சோ.விஸ்வலிங்கம்**
செயலாளர்
ஆலய தர்ம பரிபாலன சபை.

(78327)

## திருமதி திலகவதி தர்மராசா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவாக (14.09.2008 4pm)



1)அவரது பெறாமகள் டாக்டர் வசந்தி தேவராஜா அவர்களின் "Understanding Human Behaviour" என்ற ஆங்கிலப் படைப்பின் "மனித நடத்தையைப் புரிந்து கொள்ளல்" எனும் தமிழாக்கம்.

2)நாட்டுப் பற்றும் தமிழ் பற்றும் மிகுந்த ஓய்வுநிலை உச்ச நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் உச்ச நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்ட ஞான்று உச்ச நீதிமன்ற முதல் அமர்வில் மும்மொழிகளிலும் ஆற்றிய உரையும் சட்டத்துறை சார்ந்த வேறு சில முக்கிய உரைகளும் அடங்கிய கைநூல்.

3)கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தின் (சட்டப்பிரிவும் அடங்கிய) உசாத்துணைப் பிரிவின் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற திறப்பு விழா நிகழ்ச்சிகளின் தொகுப்பு.

ஆகியவற்றின் வெளியீடு 14.09.2008 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடாதிபதி நா.செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் ஜனாதிபதி சட்டலோசகர் பாயிஸ் முஸ்தப்பா, பேராசிரியர் சோ. சந்திரசேகரன், பேராசிரியர் சபா.ஜெயராஜா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகப் பங்குபற்றுவர். மனித நடத்தையைப் புரிந்து கொள்ளல் என்ற நூலின் ஆய்வுரையை டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்களும் "மனித உரிமைகள்" என்ற தலைப்பில் சிறப்புரையை திருவாளர் பாயிஸ் முஸ்தபா அவர்களும் ஆற்றுவர்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தினதும் பேராசிரியர் சபா ஜெயராஜாவினதும் சிறப்புரைகளைத் தொடர்ந்து தமிழருவி த.சிவகுமாரன் "பாரதத்தில் கிருஷ்ணர்" என்ற தலைப்பில் சொற்பெருக்காற்றுவார்.'

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற சமூக மருத்துவப் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் டி.ஜே.சோமசுந்தரம், பேராசிரியர் சோ.சந்திரசேகரன் உள்ளிட்ட சான்றோர்களின் சிறப்புப் பாராட்டுகளைப் பெற்றுள்ள "Understanding Human Behaviour" என்ற நூலின் தமிழாக்க நூல் விழாவின் போதும் அதன்பின்னரும் பிரதியொன்று ரூபா 200க்கு விற்கப்படவுள்ளது. வெளியீட்டு விழாவன்று மட்டும் விற்பனையாகும் பிரதிகளுடன் மேற்சொல்லப்பட்டபடி கையடக்க நூலும் நிகழ்ச்சித் தொகுப்பும் இலவசமாக வழங்கப்படும். விற்பனையால் வரும் பணத்தின் அரைப்பங்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் புற்றுநோயாளர்களுக்கும் மீதி அரைப்பங்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத்திற்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

துணைவர்,
**க.மு.தர்மராசா** *பிரசித்த நொத்தாரிசும், சட்ட உதவியாளரும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# செப்டெம்பர் 11 அனர்த்தத்தின் ஏழாம் ஆண்டு நினைவு தினம்

இன்று செப்டெம்பர் 11 ஆம் திகதி. '11/ 09' என்று உலகெங்கும் குறிப்பிடப்படும் முக்கிய அனர்த்த நாள்.

உலகப் பெரும் வல்லரசான அமெரிக்காவின் இதயம் என்று கருதப்படும் நியூயோர்க்கின் நடு மையத்தில் - உலக வர்த்தக மையம் அமைந்திருந்த - இரட்டைமாடிக் கோபுரங்கள் - அச்சமயம் கடத்தப்பட்டிருந்த இரு விமானங்களால் மோதித் தகர்க்கப்பட்டதில் மூவாயிரத்துக்கும் அதிகமான அப்பாவிகளின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அத்தினத்தின் ஏழாம் ஆண்டுப் பூர்த்தியில் நாம் இன்று நிற்கின்றோம்.

சர்வதேச சமாதானத்தை நிலைநாட்டும் தனியுரிமை தனக்கே உரியது என்று கருதி அதனைத் தன்பாட்டில் சுவீகரித்து, 'சர்வதேச பொலிஸ்காரனாக'த் தன்னை உலகின் முன் நிறுத்திக்கொண்ட அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு மையமான 'பென்டக்ன்' மீதும் கடத்தல் விமானத்தினால் தாக்குதல் நடத்திப் பேரழிவை ஏற்படுத்திய நாளின் நினைவுதினமும் இன்றுதான்.

இந்த அனர்த்தங்கள் நிகழ்ந்த பின்னர் இந்த ஏழு ஆண்டுகளில் பல விடயங்கள் கட்டவிழ்ந்துவிட்டன.

இந்தத் தாக்குதல்களை அடுத்து 'பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேசப் போர்' என்ற பெயரில் 'பிரபஞ்ச யுத்தப் பிரகடனம்' ஒன்றையும் செய்து, உலக நாடுகளின் மீது தனது வல்லாதிக்கத்தைத் திணித்து, பெரும் களேபரங்களை ஏற்படுத்திய அமெரிக்காவின் புஷ் நிர்வாகம், தனது ஏழாண்டு அதிகாரத் திமிர்ப்போக்கின் விளைவாக உலகெங்கும் போர் அனர்த்தங்களை உருவாக்கி, தீர்வு ஏதும் காணாமல் அதிகாரத்தை விட்டு வெளியேறப் போகின்றது.

'பயங்கரவாதம்' நிலைகொண்ட பகுதிகள் என்று தான் குறிவைத்த தேசங்களுக்கு எல்லாம் 'லேபிள்' ஒட்டி, அவற்றின் மீது பாய்ச்சல் நடத்திய அமெரிக்கா, அந்த நாடுகளில் தனது துருப்புக்களைத் தொடர்ந்து நிலைகொள்ளவும் வைக்கமுடியாமல், வாபஸ் பெறவும் முடியாமல் இரண்டும் கெட்டான் நிலையில் இன்று அந்தரிக்கின்றமை வெளிப்படையானது.

உலக நாடுகள் பலவற்றின் மீதும் தனது ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்துப் பெரும் அட்டகாசம் புரிந்த புஷ் நிர்வாகம், வரலாற்றில் பெருமளவில் மக்களால் வெறுக்கப்பட்ட - தோல்விகண்ட - அமெரிக்க ஜனாதிபதியின் ஆட்சி என்ற அவப் பெயரோடு வெளியேறுகின்றது.

செப்டெம்பர் 11 தாக்குதல்களை அடுத்து, சந்நதம் கொண்டு ஆடிய இந்த ஆட்சி, 'பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேசப் போர்' என்ற தனது திட்டத்தின் கீழ் கடைசியாக என்னத்தைச் சாதித்துவிட்டுப் போகிறது? - பெரும் சர்வதேசக் குழப்பங்களை ஏற்படுத்தியமையைத் தவிர.

செப்ரெம்பர் 11 தாக்குதல்களை நடத்திய 'அல்குவைதா' தீவிரவாதிகளின் தொட்டில் என்று தெரிவித்து, ஆப்கான் மீது பெரும் யுத்தத்தைத் தொடுத்த அமெரிக்கா, இன்று அந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்தியதா? இரத்தக்களரியையும் கொடூர யுத்தத்தையும் பேரழிவு நாசங்களையும் தொடர்ந்து ஏற்படுத்தும் ஒரு சூழலை அங்கு உருவாக்கியமையைத் தவிர, வேறெதையும் அமெரிக்க நிர்வாகத்தால் அங்கு சாதித்துக்காட்ட முடியவில்லை.

அதன்பின்னர், மனித குலத்துக்கு எதிரான பேரழிவு ஆயுதங்களை ஈராக்கின் சதாமின் நிர்வாகம் தயார் செய்து வைத்திருப்பதான அபாண்டக் குற்றச்சாட்டு ஒன்றைத் தன்பாட்டில் சிருஷ்டித்து, சுமத்தியபடி - ஐ.நா.வின் அனுமதியைக் கூடக் கோராமல் - சர்வதேசக் கருத்தை உதாசீனம் செய்தபடி - தன்னோடு அணி சேர்ந்த நாடுகளையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டு, ஈராக் மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டது புஷ் ஆட்சி.

இன்று அங்கும் அதே களேபர - கலவர - நிலைதான். சட்டம் - ஒழுங்கு குழம்பிவிட்டது. நாளாந்தம் சாவு, சண்டை, தாக்குதல், மனிதப் பேரழிவு, பெரு நாசம் - இப்படி கோரத் தாண்டவத்தில் ஈராக்கும் சிக்கித் திண்டாடுகிறது.

பயங்கரவாதத்தை அடக்கப் போவதாகக் கூறி கிளர்ந்தெழுந்த புஷ்ஷின் ஆட்சி, 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி போல' சர்வதேச ரீதியில் அமெரிக்க எதிர்ப்பு சக்திகளை ஊதிப் பெருப்பித்து, தூண்டிவிட்டு, அதனை விஸ்வரூபம் எடுக்கவைத்த பின்னர் அதனைக் கட்டுப்படுத்த எதுவும் செய்யமுடியாமல் கைவிட்டு, வெறும் கையோடு ஆட்சியை விட்டு வெளியேறுகின்றது.

சர்வதேச ரீதியில் புஷ்ஷின் ஆட்சி புரிந்த பெரும் தவறு என்ற குற்றத்திலிருந்து அமெரிக்காவை மீட்கும் பொறுப்பு, புஷ்ஷின் இடத்திற்குப் புதிதாக வரப்போகும் ஒபாமாவின் அல்லது கெய்னின் மீது வீழ்ந்திருக்கிறது.

ஒடுக்கப்பட்ட இனங்களின், அடக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சியையும், எழுச்சியையும் சரியாக அடையாளம் காணாமல், வெறுமனே - எடுத்த எடுப்பில் - அதற்கு 'பயங்கரவாத' சாயம் பூசி, தனது வல்லாதிக்கத்தால் அதனை மேலும் அடக்க முற்பட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம், அதனால் இன்று உலகின் முன்னால் தலைகுனிந்து நிற்கின்றது.

செப்டெம்பர் 11 தாக்குதலின் பின்னர், உலக நிலைமையை தவறாகக் கையாண்டதன் விளைவாக அமெரிக்காவும், அமெரிக்க சமூகமும் இன்று 'சர்வதேச குழப்பங்களுக்கு வித்திட்ட தரப்புகள்' என்ற அவப்பெயரைச் சுமந்து பெயர் கெட்டு நிற்கின்றன.

சர்வதேச ரீதியில் இடம்பெறும் அடக்குமுறைகள் குறித்தும், அடக்கப்பட்ட மக்களின் மனக் கிளர்ச்சி மற்றும் எழுச்சி குறித்தும் அமெரிக்க ஆட்சி அதிகாரம் தனது வல்லாதிக்கச் சிந்தனையிலிருந்து வெளியே வந்து தாராளப் போக்கோடு சிந்திக்காதவரை அந்த ஏகாதிபத்தியம் திருந்துவதற்கு இடமில்லை.

# இந்திய அரசாங்கத்தின் இரட்டை வேடப் போக்கை வான்புலிகளின் தாக்குதல் அம்பலமாக்கிவிட்டது

## பழ.நெடுமாறன் விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு



இந்திய அரசாங்கத்தின் இரட்டை வேடத்தினை தமிழீழ விடுதலைப்புலிகளின் வானூர்தி தாக்குதல் அம்பலப்படுத்தியுள்ளது என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வவுனியாவில் உள்ள சிங்கள இராணுவத் தலைமையகத்தின் மீது வான்புலிகளும் கரும்புலிகளும் நடத்திய தாக்குதல்களின் விளைவாக இந்தியா வழங்கியிருந்த 'ராடர்' கருவி முற்றிலுமாக அழிக்கப்பட்டதுடன் அதனை இயக்கிய இந்திய இராணுவ அதிகாரிகள் இருவர் காயமடைந்திருப்பதாக வெளியாகியிருக்கும் செய்தி இந்திய அரசின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்திவிட்டது.

சிங்கள அரசுக்கு ஆயுத உதவி மட்டுமல்ல ஆள் உதவியையும் இந்திய அரசு செய்து வருகிறது என்பது இதன்மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இந்திய அரசின் இந்தப் போக்கை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு கூடாது, பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணவேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் பலமுறை கூறிவிட்டார்.

ஆனால் நடைமுறையில் இராணுவ ரீதியான தீர்வு காண முயலும் சிங்கள அரசுக்கு இராணுவ ரீதியான உதவிகளை இந்திய அரசு செய்து வருவது தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களைக் கொதிப்படைய வைத்திருக்கிறது.

இந்தத் தகாதப் போக்கினை உடனடியாக கைவிடுமாறு இந்திய அரசை வற்புறுத்துகிறேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

# மீசாலை விக்னேஸ்வரா பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம்,செப்.11

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் கு.கதிர்காமசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகப் பட்டப் படிப்புகள் பிரிவுத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமியும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

(50-207)

# வவுனியா படைத் தலைமையத்தில் இந்தியப் படையினர் பணியாற்றியதை ஒப்புக்கொண்டது இந்தியத் தூதரகம்

கொழும்பு, செப்.11

வவுனியா சிறிலங்கா படைத்தலைமையகம் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்புப் படை நடவடிக்கையின்போது இந்திய அதிகாரிகள் இருவர் காயமடைந்துள்ளனர் என்பதை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் இந்திய தூதரகத்தின் ஊடகத்துறைப் பேச்சாளர் தின்கர் அஸ்த்தான் தெரிவித்துள்ளதாவது:

வவுனியாப் படைத் தலைமையகம் மீது கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது இந்திய அதிகாரிகள் இருவர் காயமடைந்துள்ளனர்.

வவுனியாவில் உள்ள சிறிலங்கா படையினரின் தளத்தில் பொருத்தப்பட்டிருந்த ராடரின் பராமரிப்பு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை அவர்கள் மேற்பார்வை செய்து வந்திருந்தனர்.

சிறு காயமடைந்துள்ள இந்திய அதிகாரிகளின் உயிருக்கு ஆபத்துக்கள் எதுவுமில்லை என்றார் அவர்.

எனினும் இத்தாக்குதலின் தாக்கம் அதன்பின்னர் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் சிறிலங்கா அரசு ஆராய்ந்து வருவதாக அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (50)

# வீதிப் போக்குவரத்து குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.11

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் போக்குவரத்து சம்பந்தமான கருத்தரங்கும் செயன்முறை வழிகாட்டி விளக்கமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நவாலி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

# யாழ்.மாவட்டத்தில் 200 ஏக்கர் காணியில் விதை நெல் உற்பத்தி செய்யப்படவுள்ளது

## இதற்கென 100 செய்கையாளர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.மாவட்டத்தில் 200 ஏக்கர் காணியில் விதை நெல் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இதற்கென மாவட்டத்தில் 100 நெற்செய்கையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த திங்கட்கிழமை திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் நடைபெற்றது.

விவசாய போதனாசிரியர் ஆ.சிவபாலன் தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் விவசாய போதனாசிரியர்கள், விவசாயப் பண்ணை உத்தியோகத்தர்கள், பயிர்நோய் பீடை அலுவலர் உட்பட பலர் பயிற்சிகளை வழங்கினர். விதை உற்பத்தி சங்கத்தினர் அனுசரணையுடன் இப்பயிற்சி வகுப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

# தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று



வலி.வடக்கு, செப்.11

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

காலை 7மணிக்குப் பூசையுடன் ஆரம்பமாகி 8 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் விசேட பூசைகளும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சுவாமி 9 மணிக்கு அம்பாள் தேரில் ஏறி வீதியுலா வருவார்.

யாழ்.குடாநாட்டு மக்கள் தேர்த்திருவிழாவில் கலந்துகொள்வதற்கு வசதியாகக் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும், தனியார் சிற்றூர்தி சேவையினரும் விசேட பஸ் சேவைகளை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் வரை நடத்த ஏற்பாடுகளை செய்துள்ளார்கள்.

அடியவர்களின் நன்மை கருதி அன்னதானம் இடம்பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் நிர்வாகத் தினர் மேற்கொண்டுள்ளனர்.

ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் தங்கநகைகள் அணிந்து வருவதையும் பெறுமதிமிக்க ஆவணங்களை எடுத்து வருவதையும் தவிர்த்துக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

(203-86)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

கரவெட்டி,செப்.11

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்வில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'ஆறுதல் தருவான் ஆறுமுகன்' என்னும் தலைப்பில் இலங்கை வங்கி முகாமையாளர் க.ப.ஆனந்தநடேசன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (70-72-236)

# சுற்றாடல் நட்புறவான உற்பத்திகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.மாவட்டத்தில் சுற்றாடல் நட்புறவான உற்பத்திகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

திண்மக்கழிவு மீள்சுழற்சி மன்றம், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்துடன் இணைந்து இச்செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக நேற்றுமுன்தினம் பிராந்திய அலுவலகத்தில் சுற்றாடல் நட்புறவான உற்பத்திகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

பை உற்பத்திகள், கழிவுக் கடதாசிகளைப் பயன்படுத்தி எழுதும் தாள் தயாரிக்கும் முறை என்பவை குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் திருமதி விஜித்தா சத்தியகுமார், திண்மக் கழிவு மீள்சுழற்சி மன்றத்தின் தலைவர் வீரசேன ஹினிதும, மக்கள் வங்கியின் வட பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் கே.ரி.ஆனந்தராஜா ஆகியோர் பங்குபற்றினர். (202)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 28 | 13.09.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | பி.ப. 03.34வரை |
| நட்சத்திரம் : | அவிட்டம் |
| | மு.இ. 11.13வரை |
| சுபநேரம் : | 03.03 - 04.33 |
| ராகுகாலம் : | 09.03 - 10.33 |

# ஆய்வு உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப் பரீட்சை நாளை மறுதினம்

யாழ்ப்பாணம்,செப்.11

வடக்கு மாகாண பொதுச்சேவையில் பணியாற்றுவதற்கு ஆய்வு உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடத்தப்படவுள்ள பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்துடன் 0602262951, 0262226951(709) ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட விண்ணப்பதாரிகள் கிளிநொச்சி அ... பரை தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்

| 7ஆம் வருடம் | முதலாம் வருடம் | 7ஆம் வருடம் |
|---|---|---|
|  |  |  |
| அமரர் செல்லப்பா சிவகுரு | திருமதி சிவகுரு கனகமணி | சிவகுரு மங்களாதேவி (மஞ்சு) |
| ஜனனம் : 05.04.1932 | ஜனனம் : 10.15.1944 | ஜனனம் : 27.04.1970 |
| மரணம் : 10.12.2001 | மரணம் : 24:08.2007 | மரணம் : 05.05.2001 |

திதி : பூர்வபக்க ஏகாதசி (11.09.2008)

கண்ணின் மணிகள் போல் எமைக்காத்து
சிறப்பாய் எமக்கு வாழ்வளித்து
இறப்பால் எமைப் பிரிந்து
நெஞ்சினிலே கனலும் துன்பத்தை
தீர்த்து விட யாருளர்!
கண்ணீரிலும் கரைந்திடுமோ உம் பாசம்
நிறைவாய் கண்ணிலே மறைந்திட உம் நினைவுகள்
சிதறலாய் எமை சிலிர்க்க வைக்க
சிகரமாய் எம் முன் வியாபித்திருப்பீர்கள்
இறப்பாலும் பிரிந்திடா உம் நினைவுகளுடன்....

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

153, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

குடும்பத்தினர், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(78360)

# இளைஞர்களை வழிப்படுத்தும் பொறுப்பு

## பெற்றோருடையது



உண்மையில் பெற்றோர்களாகிய எல்லோருடைய கடமையும் இளைஞர்களை வழிப்படுத்துவதுதான். ஒரு குடும்பத்தில் பிறந்த இளைஞன் நல்ல வழியில் செல்வதற்கான, புத்திமதி களைக் கூறியும், அன்பாகவும், பண்பாகவும் சமூகத்தில் நடப்பதற்கு வழிகாட்டிகளாகவும் இருப்பது பெற்றோர்தான். பயன்தரக்கூடிய மரம் செழிப்பாக வளரவேண்டும் என்றால் அது சிறு செடியாக இருக்கும்போதே அதற்குத் தேவையான உரங்களையெல்லாம் இட்டு வளர்க்கின்றோம். அதுபோல் தான் பெற்றோர்களாகிய எல்லோரும் இளைஞர்களையும் சிறுவயதில் இருந்தே நல்வழிப்படுத்த வேண்டும். இளைஞர்கள் பலர் இன்றைய காலகட்டத்தில் பாதை மாறிச் செல்கின்றார்கள். இதற்குக் காரணம் பெற்றோர்கள் இளைஞர்கள் மீது கூடிய கவனம் செலுத்தாமை தான்.

ஆகவே இளைஞர்களின் வாழ்க்கையை சீர்படுத்த வேண்டிய பொறுப்பு பெற்றோர்களின் கைகளில் தான் உள்ளது.

கா.உதயமலர்
தொண்டைமானாறு.




## ஆசிரியர்களுடையது

சிறு மழலை தன் ஆறாம் வயதில் தனது பெற்றோரைப் பிரிந்து பள்ளியிலே நுழைகிறது. ஆசிரியர் பிள்ளைக்கு புத்தகப்படிப்போடு நின்றுவிடாது, அவர்களின் வாழ்வு பல சிறப்புக்களைக் கொண்டு பிரகாசிக்கவும் தமது பணியினை ஆற்றுகின்றார்கள். சென்ற வார சொற்சமரில் பெற்றோரின் வழிகாட்டுதலால்தான் இளைஞர்கள் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடாது இருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஆசிரியரின் வழிகாட்டுதல் தான் ஒரு பிள்ளை தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதைத் தவிர்க்கின்றது. இளைஞர்கள் நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லவராக இருப்பது பெற்றோரின் வழிகாட்டுதல்தான் எனவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டமை எந்தவகையில் பொருத்தமானது என்பது புரியவில்லை. ஆசிரியரின் விடாமுயற்சியிலான செயற்பாடுகள் மூலம் பிள்ளைகள் உயர் பதவிகளைப் பெறமுடிகிறது. தமக்குக் கிடைக்கின்ற வெற்றி என்பது குறிக்கோள் அல்ல. இது ஒரு பயணம் என்பதனை உணர்த்தி இளைஞர்களிடம் கிடைக்கின்ற வெற்றிகள் மூலம் தொடர் பதவிகள், சிறப்புக்கள் பெறுவதற்கு உரமூட்டுபவர்கள் ஆசிரியர்களே ஆவார்.



க.கல்பனா,
கொடிகாமம்.

# வரலாற்றில் இந்த வாரம்

### செப்ரெம்பர் 11




எட்டயபுரத்துச் சிங்கம், புரட்சிக்கவி சுப்பிரமணிய பாரதியார் 1921ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11இல் திருவல்லிக் கேணி பார்த்தசாரதி கோயில் யானை தாக்கி, இறந்தார்.

### செப்ரெம்பர் 12




பிரிட்டனைச் சேர்ந்த ஹென்றி ஹட்சன் என்ற மாலுமி கடல்வழியாக நியூயோர்க் துறைமுகத்தைச் சென்றடைந்தது1609ஆம் ஆண்டு செப்ரெம்பர் 02இல்தான். அவர் கண்டறிந்து சென்ற நதிக்கு 'ஹட்சன் நதி' என்றே பெயரிடப்பட்டுள்ளது.

### செப்ரெம்பர் 13

பிரிட்டனைச் சேர்ந்த புகழ்பெற்ற தளபதியான ஜேம்ஸ் வூல்ஃப் என்பவர் 'கியூபெக்' போரில் வெற்றி பெற்று அந்தக் களத்திலேயே உயிர் நீத்ததும் 1759ஆம் ஆண்டு செப்ரெம்பர் 13ஆம் திகதிதான்.




### செப்ரெம்பர் 14




இந்தியாவில் பிரபல்யமான தெலுங்குத் திரைப்படத் தயாரிப்பாளரும், இயக்குநருமான ஆச்சார்ய ஆத்ரேயா என்பவர் 1989ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14இல் மரணமடைந்தார்.

### செப்ரெம்பர் 15

1916ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15இல் தான் 'டாங்கிகள்' யுத்தத்தில் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டன. முதலாவது உலக யுத்தத்தின் போது பிரிட்டிஷ் படைகள் இந்த டாங்கிகளை அறிமுகப்படுத்தின.

முதலாம் உலக யுத்த டாங்கி



### செப்ரெம்பர் 16




கர்நாடக இசைக்குயில் என்று புகழப்படும் 'கோகிலத்துவனி' எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி 1916ஆம் ஆண்டு செப்ரெம்பர் 16ஆம் திகதி பிறந்தார்.

### செப்ரெம்பர் 17

படிமமொன்றைப் புகைப்படக் கருவியினூடாகப் பதிவுசெய்த அடுத்த கணமே புகைப்படத்தை பெற்றுக்கொள்ளும் 'ரல்போ முறை' யினைக் கண்டறிந்த வில்லியம் ஹென்றி ஃபொக்ஸ் என்பவர் 1877 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 17இல் காலமானார்.




# கவிதை புனைவோம்

## தலையெழுத்து

துடுப்பிழந்த படகான
எங்கள் வாழ்க்கையில்
துயரச் சிலுவைகளையே
சுமந்து கொண்டிருக்கிறோம்
விண்ணிலிருந்து எந்தக் கடவுளும்
இறங்கி வரவில்லை
மண்ணகமெங்கனும்
மரணதேவதையின் தீர்ப்பு
சுவாசிக்கும் காற்றுக்கும்
விலைகுறித்து
வைத்தாலும் ஆச்சரியம்
ஏதுமில்லை
இன்னுமென்ன சொல்ல
இதுதான் எங்கள்
தலையெழுத்தா?

-ந.ராஜி-

# அட அப்படியா!

ஆங்கிலத்தில், ''அட அப்படியா!'' என எம்மைச் சற்றுத் திகைக்க வைக்கும் வாக்கிய வகைகள் உண்டு.

ஆங்கில எழுத்துக்கள் 26ஐயும், ஒரே ஒரு முறை பயன்படுத்தி எழுதும் வாக்கியங்கள் உண்டு. இதனை ஆங்கிலத்தில் 'பங்கிரம்ஸ்' (Pangrams) என அழைக்கின்றனர்.

சில வாக்கியங்கள் இடமிருந்து வலமாகப் படித்தாலும் சரி, வலமிருந்து இடமாகப் படித்தாலும் சரி அவை ஒரே மாதிரியாகவே இருக்கும். இவற்றைப் 'பலின்ரோம்' (Palindrome) என்பார்கள். 'ஸோடாடிக்ஸ்' (Sotadics) என்றும் கூறப்படும். கி.மு. 3 இல் கிரேக்கக் கவியான ஸோடாடஸ் என்பவர் இவ்வகை வாக்கியங்களைப் பிரபலப்படுத்தியதை ஞாபகப்படுத்தும் முகமாகவே இவ்வாறு அழைக்கப்படுகிறது.

உதாரணம் Live not on evil

ஆங்கிலத்தின் மிக நீண்ட 'பலின்ரோம்' 19000 எழுத்துக்களை உடையது!!

ம்... எங்கே இதெல்லாம் ஆங்கிலத்தில் தான் உண்டு என்று புலம்பாதீர்கள். இவை தமிழிலும் உண்டு. விகடகவி, திகதி என்பனவெல்லாம் இந்த வகைச் சொற்கள். திருஞான சம்பந்தர் அந்தக் காலத்திலேயே ''மாலைமாற்று'' என்ற வகைப் பதிகத்தைப் பாடி வைத்துவிட்டு போயிருக்கிறார். தமிழ்ப் 'பலின்ரோம்' வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு அது. உதார ணத்திற்கு ஒன்று......

''யாமாமா நீயாமா மாயாழீ காமா காணாகா
காணா காமா காழீயா மாமாயா நீ மாமாயா''

*(இப்பாடலில் வரும் சொற்களை பின்னிருந்து வாசித்தாலும் முன்னிருந்து வாசித்தாலும் ஒரே பொருளே வரும்)*

பொருள்:- அற்ப மனிதர்களால் ஒன்றும் செய்ய முடியாது. மகா சக்தி வாய்ந்த இறைவா உன்னால் தான் முடியும்.

என்ன?... மலைத்துப் போனீர்களா? தமிழ் மொழி எந்த மொழிக்கும் சளைத்ததல்ல. புரிந்துகொள்ளுங்கள்.

வி.சிந்துஜா, நல்லூர்.

# சொற்சமர்

இலங்கைக் கல்வி முறை இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு வழி சமைக்கிறதா? அல்லது தடைக்கல்லாக உள்ளதா? என்ற தொனிப் பொருளில் இனி வரும் வாரங்களில் சொற்சமர் பகுதியில் கருத்து மோதல்கள் இடம்பெறும்.

இதற்கான உங்கள் படைப்புகளை விரைவாக அனுப்பிவையுங்கள்.

# இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் '**இளவல்கள் வட்டம்**' என்ற புதிய பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.......................................
முகவரி :-.......................................
:-.......................................
....................... .......................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




# கேள்விக்கு என்ன பதில்?



ஒரு தென்னந்தோப்பில் ஐந்து வாசல்கள். ஐந்து வாசல்களிலும் ஐந்து காவலர்கள் இருந்தனர். ஒரு தேங்காய் வியாபாரி தேங்காய் பறிக்க வந்தான். முதல் காவலாளியிடம் தான் பறித்துவரும் தேங்காயில் பாதியைத் தருவதாகவும், அடுத்தவனுக்கு மீதியில் மூன்றில் ஒரு பகுதியைத் தருவதாகவும், மூன்றாமவனுக்கு இப்போது மிகுந்ததில் நான்கில் ஒரு பகுதியையும், நான்காவது காவலாளிக்கு மீதியில் ஐந்தில் ஒரு பகுதியையும், ஐந்தாவது காவலாளிக்குக் கடைசியாக மிகுந்தவற்றில் ஆறில் ஒரு பகுதியையும் தருவதாக வாக்களித்தான். வெளியில் வரும்போது அவனிடம் 200 தேங்காய்கள் இருந்தன என்றால் அவன் பறித்த தேங்காய்கள் மொத்தம் எத்தனை?

பதில் சொல்லுங்கள்.

(இதற்கான விடைகளை எழுதியனுப்புங்கள். சரியான விடை அடுத்த வாரம்)

பகுதி 4

# தலையெழுத்தைத் தீர்மானிக்கும் கையெழுத்து

**இடை மூன்று வகையினர்**

இடைமூன்று வகையினர் வல்லவர்கள், புத்திசாலிகள் ஆளுமைக்காக உழைப்பவர்கள். தாம் சார்ந்த துறையூடாக வெல்ல நினைப்பார்கள். பொதுவாக எல்லாம் எமக்குத் தெரியும் என எண்ணும் இவர்கள் உதவிக்கும் சில அனுசரணையாளர்களை வைத்திருப்பார்கள். மேடைகள் இவர்களுக்குச் சொந்தமாகும். இவர்களும் மேடைகளுக்குச் சொந்தமாவர். புகழ், பட்டங்கள் இவர்களுக்கு வாய்ப்பாக அமையும். இறைவனிடத்தும் மிகுந்த பக்தியுடையவர்கள். இவர்களை வெல்லுவது என்பது கடினமாக இருந்தாலும், இவர்களும் தோற்கக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்படவே செய்யும். கல்வி, பதவிகள், நிர்வாகபீடம் கைகொடுக்கும். விடாமுயற்சியே இவர்களின் சொத்து ஆதலால் வைத்தியம், விஞ்ஞானம், கலைத் துறைகளும் சாதகமாகும்.

**கடைமூன்று வகையினர்**

இவர்களது மூளை வேகமாக இயங்க வல்லது. மற்றவர்கள் சரியாக நடக்க வேண்டுமென எண்ணும் இவர்கள் தங்களையும் மாற்றிக் கொண்டால் உலகம் இலகுவாகும். சகல துறைகளும் வாய்ப்பாக அமைந்தாலும் வைத்தியம், விஞ்ஞான, கணிதத்துறைகள் இவர்களை வரவேற்கும். இவர்களின் வாதப்பிரதி வாதங்களால் ஏனையவர்கள் தடுமாறிப்போய் விடுவார்கள். பக்திக்கு தட்டுப்பாடும் ஏற்படுவதுண்டு. பிரச்சினைகள் தேடி வரும். வழக்குகளையும் சந்திக்க வாய்ப்புண்டு.

மேற்கூறப்பட்ட மூவகையினரும் தம்மை, ஓர் அறிவார்ந்த சமூகத்தில் அடையாளப்படுத்த வேண்டுமென்றால் தத்தமது கையெழுத்தை உயிரோட்டமாக எழுதப் பழக வேண்டும். அவ்வாறு எழுதுவீர்களாயின் வாழ்க்கையின் வெற்றிப்படிகளில் நீங்கள் இலகுவாக ஏறமுடியும். உங்கள் சந்ததியும் இந்த வெற்றியைத் தொடரமுடியும்.

கே.எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டு அமைப்புகள் மீதான தடையால் வன்னியில் அகதிகள் உயிரிழக்கும் அபாயம்

## ஆஸ்திரேலிய அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு,செப்.11

வன்னியில் மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு மனிதாபிமான பணியாளர்கள் செல்ல முடியாத பட்சத்தில் அங்குள்ள மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழக்கும் அபாயமுள்ளதாகத் தெரிவித்துள்ள ஆஸ்திரேலிய அமைப்பொன்று ஆஸ்திரேலிய அரசை இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிடுமாறு கோரியுள்ளது.

இலங்கையின் வட பகுதியிலுள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை உறுதி செய்யுமாறு இலங்கை அரசை ஆஸ்திரேலியா வற்புறுத்தவேண்டுமென அந்த அமைப்பு மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான ஆஸ்திரேலிய கவுன்ஸில் என்ற அமைப்பின் சார்பில் அதன் நிறைவேற்று இயக்குநர் போல ஒ கல்கன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். வன்னியிலிருந்து சகல மனிதாபிமான அமைப்புகளையும் வெளியேறுமாறு இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கை அரசு குறிப்பிட்ட உத்தரவை விடுப்பதற்கு முன்னரே வன்னியில் மோசமான நிலைமை உருவாகிவிட்டதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், அங்குள்ள ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் மனிதாபிமான நிலை துன்பகரமாகவுள்ளது எனக் கூறியுள்ளார்.

அடுத்த சில மாதங்களில் உயிரிழப்புகள் அதிகரிக்கலாம். மிகக் கடுமையான சூழல் உருவாகலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்,

நேரடி இராணுவ மோதலில் உயிரிழப்புகள் ஏற்படும் அதேவேளை மனிதாபிமானப் பணியாளர்கள் அப்பகுதிக்கு செல்லா விட்டால் பெருமளவானவர்கள் உயிரிழக்கக் கூடிய மிகக் கடுமையான சூழ்நிலையில் மக் கள் சிக்கக் கூடிய ஆபத்துள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

# ரொக்கட் லோஞ்சரினாலேயே 'ராடர்' கட்டமைப்பு சேதமானது

கொழும்பு,செப்.11

வவுனியா படைத்தளத்தில் இருந்த 'ராடர்' கட்டமைப்பை இலக்குவைத்துப் புலிகளின் இரண்டு விமானங்கள் நேற்று முன்தினம் அதிகாலை நான்கு குண்டுகளை வீசித் தாக்கியபோதிலும் -

அதன் பின்னர் தாக்குதலுக்கு ஊடுருவிய புலிகளின் கரும்புலிகள் அந்த 'ராடர்' கட்டமைப்பை இலக்குவைத்து ரொக்கட் லோஞ்சர்கள் மூலம் நடத்திய தாக்குதலிலேயே அக்கட்டமைப்பு சேதமடைந்ததாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

'இந்திரா II' என்ற இருபரிமாண ராடரே அங்கு பொருத்தப்பட்டிருந்தது. திருகோணமலை முதல் மன்னார் வரையான பிரதேசங்களை உள்ளடக்கிய பாரிய வான் பிரதேசத்தை நோட்டமிடும் வகையில் இந்த ராடர் பொருத்தப்பட்டிருந்தது.

இது சேதப்பட்டிருப்பதால் அப் பிராந்தியத்தில் புலிகளின் விமானங்களையும் கண்காணிப்பதில் அதுவும் படையினருக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவும் ஒரு தகவல் தெரிவிக்கிறது.

நேற்றுமுன்தினம் அதிகாலை புலிகளின் விமானத் தாக்குதலில் இந்தக் கட்டமைப்பு பெருமளவு பாதிப்புறாவிடினும் அங்கு ஊடுருவிய கரும்புலிகள் அதன் பின்னர் நடத்திய தாக்குதலில் அது பெரும் சேதமடைந்தது என்று கூறப்பட்டது.

# 'இந்திரா'ராடருக்கு என்ன நடந்தது? ஆராய வருகிறது இந்திய நிபுணர்குழு

வவுனியா படைத்தலைமையகம் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் அதிகாலை நடத்திய தாக்குதல்களில் இந்தியா வழங்கிய 'இந்திரா' ராடர், அதற்கான கட்டுப்பாட்டறை ஆகியவை சேதமடைந்தமை குறித்து ஆராய்வதற்காக இந்திய இராணுவ பொறியியல் தொழில்நுட்பவியாலாளர் குழுவொன்று கொழும் புக்கு வருகை தரவுள்ளதாக இந்தியத் தூதரக வட்டாரத்தை மேற்கோள் காட்டி இணையத்தளம் ஒன்று செவ்வாய்க் கிழமை இரவு செய்தி வெளியிட்டது.

அரசின் வான்படைக்கு புதிய ராடர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பாதுகாப்பு அதிகாரிகளுடன் அக்குழு பேச்சு நடத்தவுள்ளது எனவும்,

வவுனியா படைத்தலைமையகம் அமைந்துள்ள ஜோஸப் இராணுவ முகாமிலுள்ள ராடர் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடமையாற்றிய இரு இந்திய பொறியியலாளர்கள் காயமடைந்தமை குறித்து இக்குழு விவரங்களைப் பெற்றுக்கொள்ளும் எனவும் அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

ஆயினும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகமோ, பாதுகாப்பு அமைச்சோ இக்குழுவின் வருகை தொடர்பில் எதுவும் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை.

## 99 மேலதிக வாக்குகளால் அவசரகாலச் சட்டம் நீடிப்பு

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை 99 மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் மாலை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இதற் கான பிரேரணையைச் சபையில் சமர்ப் பித்து உரையாற்றினார்.

பிரேரணைக்கு ஆதரவாக 110 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அரச தரப்புக் கட்சிகள் அனைத்தும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. ஐ.தே.கட்சி இந்த வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. மக்கள் விடுதலை முன்னணி பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பி. பா. அரியநேத்திரன் மூன்று மாதங்களுக்கு நாடாளுமன்றிற்கு சமுகம் கொடுக்காதிருப்பதற்காக அவருக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறையை சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார் நேற்று முன்தினம் நாடாளு மன்றில் வைத்து வழங்கினார்.


கணனிக் கற்கைநெறிகள்

A/L 2008 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை IBMS உடன் இணைந்து பயனுள்ளதாக்கிக்கொள்ளுங்கள்.

இப்பிரிவில் இணைந்துகொள்ளும் மாணவர்களுக்கு IBMS நிறுவனம் விசேடசலுகைகளை வழங்குகின்றது.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 3 :- 12.09.2008 பகல்
பிரிவு 4 :- 14.09.2008 10.00மணி

குறிப்பிட்ட Diploma கற்கை நெறிகளுக்கான ONLINE பிரிவுகளும் ஆரம்பமாகும்.

Diploma Courses

| Courses | Duration | Fees |
| --- | --- | --- |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |

Basic Level ENGLISH Duration :- 3 Months

A General English Course designed to cover and improve the 4 main language skills of Reading, Writing, Listening & Speaking.

பரீட்சைக்குத் தோற்றியமாணவர்கள், அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் உங்களுக்கானவே ஆரம்பம்.

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
#209, மானிப்பாய் வீதி, வைத்தியசாலைச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P :-021 222 8232 Fax:- 021 222 6933
கிளைகள் :- சங்கத்தானை,சாவகச்சேரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.


# நிறுவுநர் நினைவு நாள்- 2008




சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் ஸ்தாபகரும் முன்னாள் தலைவருமான அன்னை அமரர் அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் இரண்டாவது நினைவுநாள் இன்றாகும். கண்பார்வையற்ற நிலையில் கதியற்றுத் தவித்து நின்ற சிறார்களையெல்லாம் அன்போடு அரவணைத்து, அற்புதமாய்க் கல்வியூட்டி அவனியிலே அனைத்துப் பிரசைகளுக்கும் சமமானவர்களாய் அவர்களையும் வாழவைத்த பெருமைக்குரியர் இந்த அன்னை. கண் பார்வையற்றவர்களின் கல்வி வரலாற்றில் என்றுமே இவ்வன்னைக்கு ஓர் அழியாத இடமுண்டு. 1972ஆம் ஆண்டு தொடக்கம் 2006.09.11இல் அமரத்துவமடையும் வரை இவர் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியவை. இவரது மாணவர்கள் பலர் இன்று கல்வியில் சிறந்து அரச உத்தியோகத்தர்களாய் இன்னும் பல உயர் பதவிகள், பொறுப்புக்களை வகிப்பவர்களாய் மிகவும் சிறப்பாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

பெயரையோ, புகழையோ விரும்பாது மறைவாக வாழ்ந்து நிறைவாகப் பணியாற்றி, தன் மாணவர்களின் நிறைவான வாழ்வுக்கு வழிசமைத்த இவ்வன்னை மனுக்குல சேவையாளர்களுக்கெல்லாம் ஓர் உன்னத எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தார் என்று கூறினும் அது மிகையாகாது. அன்னையவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வாழ்வகம் அவரது விருப்பம் போலவே அவரின் மாணவரான திரு.ஆ.ரவீந்திரன் அவர்களின் தலைமையில் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. வாழ்வக மாணவர்கள் தொடர்ந்தும் தமது திறமைகளை அற்புதமாய் வெளிக்காட்டிவருகின்றனர். கடந்த 2007ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய செல்வன் யோகலிங்கம் சுதாகரன், செல்வி கிருபானந்ததேவன் ரேகா ஆகிய இரு மாணவர்களுமே பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளமை இங்கு பெருமையுடன் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

அன்னையவர்களின் நினைவுநாளான இன்றைய தினம் வாழ்வக சமூகத்தால் ''நிறுவுநர் நினைவு நாளாக'' அனுட் டிக்கப்படுகிறது. இந்நிகழ்வுகள் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 1.30 வரை வாழ்வக இல்லத்தில் நடைபெற உள்ளன. இந்நிகழ்வுகளில் முக்கிய அம்மசமாக சிறப்பு மலர் வெளியீடு, நிறுவுநர் நினைவுப் பேருரை என்பன இடம்பெறவுள்ளன.

எம்மத்தியிலே வாழ்ந்த இந்த உன்னத சேவையாளரின் பெருமையினை நிச்சயமாக நம்மவர்கள் அனைவரும் மதித்துப் போற்ற வேண்டும்.

வாழ்வக வளாகத்தில் அமைந்துள்ள அன்னையவர்களின் புனித சமாதி மீது கட்டியெழுப்பப்படவேண்டிய நினைவாலயம் நிதி நெருக்கடி காரணமாக இன்னமும் அடிக்கல் நாட்டப்பட்ட நிலையிலேயே உள்ளமை வாழ்வக சமூகத்தினர் அனைவருக்குமே பெரும் ஆதங்கத்தைத் தருவதாய் உள்ளது. இப் புனிதப் பணியினைப் பூர்த்தியாக்க நல்லியதம் படைத்த அன்பர்களின் பேராதரவினை வாழ்வக சமூகம் நாடிநிற்கின்றது.

அன்னையின் கனவை நனவாக்குவதற்காக பல்கலைக்கழகத்திற்கு இம்முறை தெரிவாகியுள்ள வாழ்வக மாணவர்கள்.


செல்வன் யோகலிங்கம் சுதாகரன்,


செல்வி கிருபானந்ததேவன் ரேகா

வாழ்வக சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சத்தியமூர்த்தி
அம்பிகை

மலர்வு
22 ★ 03 ★ 1943
உதிர்வு
11★ 08 ★ 2008

ஆறாத் துயரில் எமையெல்லாம்
ஆழ்த்தி விட்டு போனதெங்கே
எங்கள் கோயிலே?
உயர்வாக உமை நினைத்தே
உரிமையுடன் நாம் இரங்க
சொல்லாமல் கொள்ளாமல் - நீர்
பயணமான தென்ன
இன் முகம் காட்டி நல்லன பேசி
அறுசுவை உண்டிதனை
மனம் கோணாது எமக்கீந்து
வல்லன செய்து காட்டிய கோயிலே
நோய் எனும் வடிவில் காலன் வந்தானோ
பூலோக வாழ்விது காணும்
மென நினைத்தானோ
எம் நெஞ்சம் எல்லாம் நிறைந்த
எம் அன்புக் கோயிலே - இனி
எப்போது உம்மை காண்போம்?

மாதகல். (78350) சீவரட்ணம் குடும்பம்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா சின்னம்மா

சாந்தா வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் பட்டி ஓலை, உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா சின்னம்மா நேற்று (10.09.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான செல்லப்பா- தெய்வானை தம்பதியினரின் இளையமகளும், செல்லையா, அமரர் கணபதிப்பிள்ளை, மற்றும் செல்லத்துரை அமரர்களான வள்ளியம்மை, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பட்டி ஓலை,
உடுவில். (78357)

தகவல்:
பேரமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## University of Jaffna IRQUE Project

**Vacancies for English Language and Information Technology Instructors (Visiting)**

Applications are invited from suitable persons for the following posts to conduct intensive course in English Language and Information Technology to the final year undergraduates of the Faculties of Arts and Management Studies & Commerce of the University of Jaffna.

**1. Instructors in IT (Visiting)**

Applicants should be graduates who possess Bachelor of Science Degree with Computer Science as a subject.

**2. Instructors in English Language (Visiting)**

Applicants should be either graduates with English as a subject or English medium graduates and have professional qualifications to teach English Language or English Special Trained teachers with at least five years experience in teaching English after training.

Applications should reach "THE DIRECTOR, LTS, IRQUE PROJECT, UNIVERSITY OF JAFFNA, JAFFNA" on or before 24th September 2008. Only short listed candidates will be called for an interview. Courses will be conducted at the Main Campus, Thirunelvely as well as at Vavuniya Campus.

**Director / LTS**
**University of Jaffna**
**08.09.2008**

## மரண அறிவித்தல்

### நடராசா சத்திராஜ்

அச்செழு, விதானையார் வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் நடராசா சத்திராஜ் நேற்றுக் காலமானார்.

அன்னார் நடராசா - மகாலட்சுமி தம்பதியரின் மகனும் கோபிகரன் (லண்டன்), தயாகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவகரன் மற்றும் கருணாகரன், நவகரன் (கனடா), சுசிகரன், மதுரா(கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி), சுமித்திரா, சுசதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப. 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அச்செழு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விதானையார் வளவு,
அச்செழு, நீர்வேலி.

தகவல்: வே.நடராசா
(தந்தை)

## சாரணர்களுக்கான கலந்துரையாடல்

இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி மாவட்ட தென்மராட்சி கிளையின் சாரணர்களுக்கான கலைக்கூறு II இற்கான கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
(1-207)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1018 நீலம்

வெற்றி இலக்கங்கள்

சிங்கம்

14 22 32 37

09-09-2008

• செல்லுபடியாகும் தொடர் இல. 400000000 - 400021292
ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 230,255 | 20/- | 4,605,100/- |
| 2 இலக்கங்கள் | 21,140 | 40/- | 845,600/- |
| 1 இல. + லக்கினம் | 21,006 | 60/- | 1,260,360/- |
| 2 இல. + லக்கினம் | 1,900 | 200/- | 380,000/- |
| 3 இலக்கங்கள் | 559 | 1000/- | 559,000/- |
| 3 இல. + லக்கினம் | 52 | 10,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | |
| மொத்தம் | | | 8,970,060/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 274,921 | | 9,470,060/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,028,600/-

[illegible]

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

[illegible]

| | |
|---|---|
| [illegible] | 400020148-3-36 |
| [illegible] | 400004390-6-16 |
| [illegible] | 400019355-0-34 |
| [illegible] | 400020871-3-29 |
| [illegible] | 400012466-1-03 |

# B Sc. in Comp. Sc.

நானும் படிக்கலாமா?

கேள்வி கேட்டுக்கொண்டிருப்பதால் மட்டும் என்ன பயன்?

Trinity University USA Spain இனது கணினிப் பட்டதாரியாக முடியும்

1 எமது நிறுவனத்தில் காலையில் வேலை.... மாலையில் படித்து பட்டதாரியாக முடியும்
உடனடி வேலைவாய்ப்பு!
கணினிபற்றிய முன்னறிவு அவசியமில்லை

2 நீங்கள் இப்போது ஒரு வேலையில் இருக்கிறீர்கள் கைநிறைய சம்பாதிக்கிறீர்கள்! ஆனாலும்........
உங்களால் பட்டதாரியாக முடியவில்லை.....
உங்களுக்காகவே விடுமுறை நாட்களில்....

3 நீங்கள் கணினித்துறை சார் வல்லுனர்...........
ஆனாலும் நீங்கள் பட்டதாரியாகவில்லையே..
நீங்களும் குறுகிய காலத்தில் பட்டதாரியாக
அரிய சந்தர்ப்பம்!

குறிப்பாக BIT, HND, Diploma படித்தவர்களுக்கு

கற்கைநெறி முழுவதும் எமது நிறுவனத்திலேயே பூர்த்தி செய்யலாம்
[illegible] Degree Certificates [illegible]

[illegible] PGDCA, M.Sc. வரை

[illegible]

எமது நிறுவனத்தின் ஆலோசகர்கள்

Dr.P.Balasundarampillai Prof.A.Shanmugadas
(முன்னாள் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)

ஆகியோரின் உயரிய வழிகாட்டலில்

NORTH LANKA IIT
Main Street, Chankanai. 060 221 4305
New College of Higher Studies NO 95, [illegible] Jaffna.

Excellent pathway for your future

Study in New Zealand, Netherlands, Malta UK, Switzerland, Singapore, Malaysia, India

Apply now for student Intake - Oct / Dec / Feb / Jul

Programme and Courses - Certificate, and Diploma to degrees and doctorates

↗Fontys University of Applied Science ↗ Tilburg University ↗ Wittenborg University
↗Saxion University of Applied Science ↗ International Management Institute
↗Business & Hotel Management School ↗ University of London ↗ Unitec Campus
↗University of Bradford ↗ University of Greenwich ↗ East London College
↗European Institute of Education ↗ AIS ST HLENS ↗ Universal College of Learning
↗ Natcoll Design Technology ↗ Hartford Institute ↗ Raffles Design Institute
↗ PATH School of Technology and Management ↗ Paramount College of Technology

Our Certification in Bsc (Hons) in Multimedia / IT / BBA / Pharmacy will entitle you to university exemption, 1ST year, in Jaffna or Colombo, 2ND, 3RD, year in UK, Netherlands, and Malta.

BENEFITS TO OUR CLIENTS ↗ Guidance by a professional with 07 years experience
↗ No interview ↗ No need Bank Balance (Sponsorship)
↗ [illegible]
↗ [illegible]
↗ [illegible]
↗ [illegible] Resident Permit approval [illegible]
↗ [illegible] G.C.E (O/L) [illegible]
↗ Diploma / Advanced Diploma [illegible] Exemption [illegible]
↗ IELTS / TOEFL [illegible] 100% Guarantee for marks
↗ [illegible]

TUITION FEE AFTER THE VISA
FREE FIRST 02 YEARS
ACCOMMODATION
Registration Now on

[illegible] B. Sc. in Multimedia 1st Year [illegible]

North Lanka IIT | Main Street | Chankanai | Jaffna | Phone : 060 221 4305

[illegible]
NCL [illegible] 2008 September [illegible] foreign Universities [illegible]



Nottingham College of London
No: 36 1/1, Station Road, Wellawatte, Colombo - 06, Sri Lanka.
Phone: +94 (0) 11 2 598059 | Fax: +94 (0) 11 2 552496
Web: www.nclworld.net | Email: lifetime@nclworld.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டு அமைப்புகளின் வெளியேற்றம் தமிழினம் படுகொலைக்கு சாட்சி இல்லாமற் செய்யும்

## பொது அமைப்புகள் ஒன்றியம் ஐ.நாவுக்கு மகஜர்

வன்னியிலிருந்து தொண்டு நிறுவனங்களை வெளியேற்றுதல் என்பது பட்டினிச் சாவையும், துன்பியல் வாழ்க்கையையும், தமிழ் மக்களுக்கு பரிசளிப்பதற்கு சமனானவை அத்துடன் அரசு மேற்கொள்ளும், தமிழினப் படுகொலைகளுக்கு சாட்சிகள் இல்லாமல் செய்யும் நிலைப்பாட்டையும் இது உருவாக்கியுள்ளது.

- இவ்வாறு கிளிநொச்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு அனுப்பிய மனுவில் தெரிவித்துள்ளது.

அம்மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தொண்டு அமைப்புக்களை வன்னியில் இருந்து வெளியேறுமாறு இலங்கை அரசு வெளியிட்டுள்ள செய்தி அச்சம் தருவதாகவுள்ளது. இந்த அறிவிப்பானது பட்டினிச்சாவையும், துன்பியல் வாழ்க்கையையும், தமிழ் மக்களுக்கு பரிசளிக்கின்றது.

இலங்கை அரசு எமது மண்ணின் மீதும், மக்கள் மீதும் மேற்கொண்டுவரும் கடுமையான - பயங்கரவாதத்தனமான - கொடிய போர் - தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை முறையை அடியோடு ஆட்டங்காணச் செய்துள்ளது.

தொடர்ச்சியான இடம்பெயர்வுகள், பட்டினியுடன் கூடிய உயிர் வாழ்தலுக்கான எத்தனிப்புக்கள் பதுங்குகுழியே வாழ்வாகிப் போன அவலம், பொழுதுகள் தோறும் பலியெடுக்கப்படும் மனித உயிர்கள் என நீண்டுள்ள துயரங்களுக்குச் சிகரம் வைத்தாற்போல் அரச சார்பற்ற நிறுவனங்களை வெளியேறுமாறு கோரும் இலங்கை அரசின் அறிவிப்பு அமைந்திருக்கிறது.

இது மிகுந்த பேரச்சத்தையும், எதிர்காலம் பற்றிய இருள்மயமான கனவினையும் எமக்குத் தோற்றுவித்துள்ளன - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கல்கிசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுவெடிப்பை அடுத்து அந்த இடத்திற்கு வந்த இராணுவத்தினரும், பொலிஸாரும் உடனடியாகத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளின் போது 200 கிராம் அளவுடைய குண்டு ஒன்றே வெடித்தது எனக் கண்டறியப்பட்டது.

சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியால் செல்லும் ரயில் போக்குவரத்துகள் தற்காகலிகமாக தடைசெய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அந்தப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் மேலதிகத் தேடுதல்கள் மற்றும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். (சி)

## வன்னியில் மனிதாபி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் மோதலில் சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவி அவசரமாகத் தேவைப்படும் நிலையில் மனிதாபிமான அமைப்புகள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டியதும், அந்த அமைப்புகள் பாதுகாப்பாகச் செயற்பட அனுமதிக்க வேண்டிய கடப்பாடும் அரசுக்கு உள்ளது எனவும் பான் கி மூன் நினைவூட்டியுள்ளார்.

மேலும், பொதுமக்களின் பாதுகாப்பு, நடமாட்ட சுதந்திரம் போன்றவற்றை உறுதி செய்யுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மனிதாபிமானச் சட்டங்களைப் பேண அறிவுறுத்து

இராணுவ இலக்குகளைத் தெரிவு செய்யும்போது சர்வதேச மனிதாபிமான சட்டங்களைப் பேண வேண்டியதன் அவசியத்தையும் செயலாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் அரசியல் பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தையும் பான் கி மூன் உறுதியாக வலியுறுத்தியுள்ளார். (அ)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் அறிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகத்தில் பிரயாணத்தினை மேற்கொள்வதற்கு அனுமதிச்சீட்டைப் பெற்றவர்கள் தமது அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு மறுதினம் தமது பயணத்தினை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தி உள்ளார். (அ-1)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவற்ற குழந்தைகள், சிறுவர்களைப் பராமரிக்கும் 'தளிர்கள்' சிறுவர் இல்லத்திலிருந்து சுமார் 75 மீற்றர் தூரத்தில் சில குண்டுகள் விழுந்தன. எனினும் குண்டு விழுந்த நேரத்தில் அங்கு குழந்தைகள் எவரும் இருக்காததால் அவர்கள் அதிர்ஷ்டவசமாகத் தப்பித்துக் கொண்டனர்.

### பிரதேச செயலகமும் குண்டு வீச்சில் சேதம்

'ஒக்ஸ்பாம்', 'சேவாலங்கா' ஆகிய மனிதாபிமானத் தொண்டு அமைப்புகளின் பிரதான அலுவலகங்களுக்கு சுமார் 100 மீற்றர் தூரத்திலும் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

பளையில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி நகரில் இயங்கி வந்த பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் இந்தக் குண்டு வீச்சில் சேதமடைந்தது.

வன்னியில் செயல்படும் ஐ. நா. அமைப்புகள் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாவட்ட செயலகம் உட்பட அரச திணைக்களங்கள் போன்றவற்றின் அலுவலகங்கள் கிளிநொச்சி நகரிலேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச தொண்டு அமைப்புகள் யாவும் வன்னியிலிருந்து உடனடியாக வெளியேறி விட வேண்டும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடுந்தொனியில் உத்தரவிட்ட இரு நாள்களின் பின்னர் கிளிநொச்சி நகரப்பகுதியில் இத்தகைய பாரிய விமானத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-சி)

## அங்கர், லக்ஸ்பிறே ப.நோ.கூ. சங்கம் மூலம் விற்பனைக்கு

கப்பல் மூலம் தருவிக்கப்பட்டுள்ள அங்கர், லக்ஸ்பிறே ஆகிய முழு அடைப்பால்மா வகைகள் மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ. சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதற்குரிய வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித் துள்ளார்.

## கட்டுநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் அதிகாலை புலிகள் நடத்திய மும்மார்க்கத் தாக்குதலில் சிதைவடைந்த 'ராடர்' கருவிகள் அன்றைய தினமே கொழும்புக்கு எடுத்துவரப்பட்டன. அதற்குப் பதிலாகவே கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புதிய 'ராடர்' கட்டமைப்புக் கருவிகள் நேற்று முன்தினம் இரவு வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அங்கு புதிய ராடரைப் பொருத்தும் பணிகள் நேற்று முழுவதும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், அவர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் யு.என்.சி.ஆர். கேட்டுக்கொண்டுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை இலக்கு வைக்க வேண்டாமெனவும் இராணுவ இலக்குகளுக்கு அருகில் குடியமர்த்த வேண்டாமெனவும் யு.என்.எச்.சி.ஆர்.பேச்சாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னியில் உணவு,தங்குமிடங்கள், குடிதண்ணீர் மற்றும் சுகாதார கருவிகளும் எரிபொருள்களும் மிக மிகக் குறைவாக - ஆபத்தான அளவில் - காணப்படுகின்றன எனவும் ரெட்மொன்ட் தெரிவித்துள்ளார்.

வன்னிக்குள் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக மனிதாபிமானப் பணியாளர்கள் தீர்ந்து போனவற்றுக்குப் பதிலாக புதிய பொருள்களைக் கொண்டு செல்ல முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மனிதாபிமான உதவிப் பொருள்களை அங்கு எடுத்துச் செல்வதற்கு முடிந்தளவு விரைவாக அனுமதி வழங்குமாறும் அவர் கோரியுள்ளார். (அ)

## அம்பாறையில் இரு படையினர் பலி

அம்பாறை, பாக்கிமிட்டியாவப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கெரில்லா அணியினரின் நிலக் கண்ணிவெடியில் சிக்கியதில் இருவர் உயிரிழந்ததுடன் ஆறு பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த இராணுவத்தினரில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாகியுள் ளது என்றும் தகவல்கள் வெளியாகின. எனி னும் இது குறித்து பாதுகாப்புத் தரப்பிலிருந்து எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டு அமைப்புகளுக்குச் சொந்தமான 50 வாகனங்கள் நேற்று மாலை வரை ஓமந்தை சோதனைச் சாவடியைக் கடந்து வெளியே வந்தன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. வன்னியில் 11 சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் செயற்பட்டு வந்தன.

அரசின் உத்தரவைத் தொடர்ந்து தாங்கள் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறார்கள் எனத் தெரிவித்துள்ள மனிதநேய முகவர் அமைப்புகளின் கூட்டமைப்பின் பிரதி இயக்குநர் பர்ஜான் ஹாசிம், அரசு முன்னெடுக்கவுள்ள விநியோக நடவடிக்கைகளுக்கு எவ்வாறு உதவ லாம் என ஆராயப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

"வன்னி மக்கள் குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம். கடந்த சில மாதங்களில் மக்கள் மேலும் உட்பகுதிகளை நோக்கி இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். நாங்கள் அவர்களை சென்றடைவதில் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளோம்" என மனிதநேய அமைப்பு ஒன்றின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

உணவும், தங்குமிடமும் பிரச்சினையாக உள்ளன. மக்கள் முல்லைத்தீவை நோக்கி நகர்வதற்கு மேலும் நிர்ப்பந்திக்கப்பட்டால் நிலைமை இன்னமும் மோசமடையும். அவர்களை யார் பார்ப்பார்கள் என்பது கேள்விக் குறியாக இருக்கும் என அவர் தெரிவித் துள்ளார்.

உணவே மக்களுக்கு மிகவும் அவசியமாக உள்ளது. அகதிகளுக்கு தங்குமிடங்கள் இல்லை. வீடுகளோ, பணமோ இல்லை. அவர்களால் எதனையும் வாங்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"வன்னியில் தற்போது மழை பெய்கிறது. மேலும் மழை பெய்யலாம். இதனால் தங்குமிடங்கள் அவசியமாகத் தேவைப்படுகின்றன" என்றும் குறிப்பிட்டுள்ள மனிதநேய அமைப்பின் இயக்குநர் "இடம்பெயர்ந்தவர்களில் பலர் பாடசாலைகளில் தங்கியுள்ளனர். பாடசாலைகளை மீள ஆரம்பிக்க வேண்டியுள்ளதால் அவர்களைத் தற்காலிகக் கூடாரங்களில் தங்கவைக்க வேண்டிய நிலை உள்ளது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுமக்களின் மனிதாபிமானத் தேவைகளைக் குறித்து மாத்திரம் தாங்கள் கவலை அடையவில்லை என்றும் பணியாளர்களின் பாது காப்புக் குறித்தும் தாங்கள் கரிசனை கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிவந்து விற்பனையாகிறது
வரலாறு
தரம் - 11, தரம் - 10
ஆசிரியர் - நா.மயில்வாகனம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

NEW SCIENCE HALL
KANNATHIDDY JAFFNA
★ SIMPLIFIED ENGLISH COURSE ★
By B.Sasikkumar [Dip. in Eng.]
Starts On 12th Sep. 2008
Fri. at 10.00 a.m
(Mon, Wed)

2008.தரம்:4 வெற்றித்தேர்வு
திருமலை. S.கணேசலிங்கம் அவர்களின்
2008-தரம்:4. மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு தொடர்- 8 முதல் 15 வரை
தொடராகப் பெற ரூபா200 செலுத்தி இன்றே
புத்தகசாலைகளில் பதிவு அட்டை பெறுங்கள்.
குறைந்த பிரதிகள் வந்துள்ளதால் முந்துங்கள்
தனித்தனியாக பணம்கொடுத்து பெறமுடியாது.
தபாலில் தேவையானோர்:- 0212229016

PAPER CLASS
இந்து நாகரிகம்
ஆரம்பம்:-
11.09.2008 வியா. 3pm
By S.ஜெயக்குமார்
யூனிவேர்சல்

புவியியல் A/L 2009
★ மாதிரிப் புவியியல் (வினா விடை உட்பட)
ஆரம்பம்:- 12.09.08 Fri- 5 p.m
A.Rajah
★ அரசியல்: T.ரஜன்
★ இந்து நாக: S.கார்த்திக்
★ Gr.I முதல் O/L வரை English Medium Btool
★ புலமைப் பரிசில் (5) (ஆங்கில பரீட்சைகளுடன்)
★ SINHALA
★ SPOKEN ENGLISH G.Rangit
SHAMROCK

SPOKEN ENGLISH WITH GRAMMER
BATCH- I
ஆரம்பம்- 12.09.08
Fri - 5pm
BATCH- II
Sat, Sun- 11.30-12.30 p.m
BATCH- III
Sat, Sun- 12.30-1.30 p.m
ஆரம்பம்- 13.09.08
Satuarday.
By S.Jaisan
NEC
Clock Tower, Rd, Jaffna.

PHYSICS
A/L 2010
நீர் நிலையியல்
ஆரம்பம்:- 12.09.2008
Fri- 4 - 5pm
K.Selvan
NEC
Clock Tower Road, Jaffna

நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்
A/L பரீட்சையெடுத்த மாணவர்களின் நலன் கருதி
சிங்கள, ஆங்கில வகுப்புகள்
ஆரம்பம்:- 13.09.08
சனி 3.30 மணி
சிங்களம்:- திரு.V.சிவா
ஆங்கிலம்:- திரு.S.சுதர்சன்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

பதவி வெற்றிடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய பிரதேசங்களில் இயங்கும் ISO தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.
பதவி நிலை :
முதலீட்டு உதவியாளர் தரம் II
தகைமை :
G.C.E O/L இல் தமிழ், கணிதம் உட்பட 6 பாடத்தில் சித்தி
வயதெல்லை: 18 - 45 வரை
விண்ணப்பமுடிவு திகதி: 15/09/2008
சம்பளம்: 15,000/=
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
மே/பா விளம்பர இல:- 3136
உதயன் பணிமனை.

SCC
விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
SCC கல்வி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கு விசேட சலுகைக்கட்டணம் வழங்குகிறது இன்றே எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
2008 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்
Dip. In MS Office - 4 Months
Dip. In Desktop Publishing - 4 Months
Dip. In Internet e-mail - 2 Months
Dip. In Hardware Engineering - 4 Months
Dip. In Computer Programming - 6 Months
Dip. In Eng. Drawing & Auto CAD - 3 Months
Dip. In Computerized Accounting - 4 Months
Dip. In Data Base Management System - 4 Months
Dip. In Audio & Video Editing - 4 Months
Dip. In Visual Basic - 4 Months
Dip. In Web Designing - 4 Months
3000/=
Batch I 06.09.2008 Batch II 10.09.2008
Batch III 14.09.2008 Batch IV 19.09.2008
ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்
Softview Computer College
Arasady Rd, Jaffna. T.P: 021 2225170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.09.2008 இல் டு வெளியிடப்பெற்றது.